கட்டுரை இயல்

(Essay Writing

தமிழ் மொழி மலர் 1.

கட்டுரை இயல்

கட்டுரை எழுதுதல்பற்றி உயர்தர வகுப்பு மாணவர்களின் உபயோகத்திற்காக எழுதப்பெற்றது.

❊

This book has been written specially for the use of students preparing for higher Examinations such as J. S. C., S. S C. University Entrance, H. S. C., Etc.

❊

—பண்டித வி. சீ. கந்தையா.

முதற் பதிப்பு ஆடி 1950

பிரதிகள் 3000

விலை ரூபா 1-50.

பதிப்புரிமை ஆசிரியருக்கே

Copyright reserved by the Author.

பொருளடக்கம்.

		பக்கம்
முகவுரை	i	
பொன்னுரை	iii	
அணிந்துரை	v	
I. கட்டுரை விளக்கம்		
1. குறிக்கோள்		1
2. கட்டுரை வகை		2
3. பத்திரிகை படித்தல்		2
4. தமிழின் மறுமலர்ச்சி		3
5. பத்திரிகைத் தமிழ்		5
6. செந்தமிழ்		6
7. கிராமியச் சொற்களும் கடுந் தமிழ்ப் பதங்களும்		6
8. அறிவு நோக்கமும் ஆழ்ந்த சிந்தனையும்		7
9. குறிப்புகள் எடுத்துக்கொள்ளல்		9
10. முகவுரையும் முடிவுரையும்		11
11. இலக்கண மரபு முதலியன		12
12. குறியீடு		13
13. முக்கியமான எழுத்துப் பிழைகள்		15
14. ஓரோசை எழுத்துக்கள்		16
15. திருப்பி வாசித்தல்		18
16. பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதல்		19
17. கட்டுரை தெரிதல்		21
II. வருணனைப் பகுதிகளும் தழுவி எழுதுதலும்		
1. ஆலமரமொன்று என்னிடம் கூறியவை		24
2. நீலவானம்		25
3. விளைந்த வயற் காட்சி		26
4. வகுப்பறை கூறியவை		28
5. ஒரு பட்டமரம்		29
6. பூரணை இரவில்		30

பக்கம்

7. ஒரு மாம்பழக் குலை 31
8. ஒரு வாய்க்கால் 32
9. வேறுசில மேற்கோள் : 33
புலரிக்காலை, காவேரிதீரம், காலைநேரம், மருதநிலம், மாலைநேரம் அருவிக்கரை, ரணகளம், சிவனடியார். 34-39

III. மாதிரிக் கட்டுரைகள்
1. நோக்கமும் பயனும் 40
2. பரீட்சைகளில் வினாவுக் கேற்ப விடை தரல் 41
3. பெரியோர் வரலாறு 43
4. கடிதம் எழுதுதல் 45
5. கட்டுரைகள் : 47

1. தமிழின் சிறப்பு 47
2. பெண்கள் கல்வி 53
3. விபுலாநந்த சுவாமிகள் 57
4. விஞ்ஞானக் கலை வளர்ச்சி 61
5. உழவுத் தொழில் 66
6. இலங்கையின் பொருளாதாரம் 70
7. (இலங்கையில்) சமீபத்தில் வந்த வெள்ளப்பெருக்கு 76
8. தேசிய சேமிப்பு இயக்கத்தின் நோக்கமும் பயனும் 79

IV. பயிற்சி அப்பியாசங்கள்
1. கற்பனையும் வருணனைகளும் 83
2. சொல்லுதல் 85
3. சுகாதாரம் 86
4. தொழில் 5. அரசியல் 87
6. கல்வி 89
7. விஞ்ஞானம் 8. ஒப்பு நோக்கல் 91
9. பழமொழிகள் போன்றவை 92
10. பெரியோர் வரலாறு 93

முகவுரை

கட்டுரை என்ற சொல் பேச்சினையும் எழுத்தினையும் குறிப்பிடுவது. இரண்டிற்கும் பொதுவான சொல்வன்மையும், பொருளமைதியும், பிழைநீக்கம் முதலியனவும் மனக் கருத்தை மற்றையோர்க்கு நன்கு புலப்படுத்தற்கு இன்றியமையாத கருவிகள். தமிழ்மொழிப் பாடத்தின் (Tamil Language) ஒரு அம்சமான இது எழுத்து மூலம் பரீட்சைகளிற் பரிசோதிக்கப்படுகின்றது. கட்டுரை எழுதும் ஆற்றலை நன்கு வளர்க்கும் ஒரு வழி எழுதும் பயிற்சியேயாகும்.

கட்டுரைகளை நன்முறையில் எழுதுதற்கு அடிப்படையான சில குறிப்புகளை இச்சிறு நூலின் மூலம் மாணவர்களுக்குக் காட்ட முயன்றிருக்கிறேன். இப்பொருள் சம்பந்தமாகத் தமிழில் இதுவரை வெளிவந்த நூல்களுக்குப் புறம்பான முறையில் இது எழுதப்பெற்றிருப்பதைக் காணலாம். எனது சிறு அநுபவக் குறிப்புகள் சில புதிதாகப் புனையப்பட்டிருக்கின்றன. காலத்தையொட்டித் தமிழ் மொழி வளர வேண்டும் என்ற நற் கருத்தைத் தமிழ் அறிவாளிகளும், ஆசிரியர்களும் விரிந்த மனப்பாங்குடன் ஏற்றுக்கொள்வார்களென்பது எனது நம்பிக்கை. இவ்வகையில், பிறமொழிச் சொற்களைத்

தமிழில் எடுத்தாளுதல் பற்றிப் பெரியோர் பலருடைய இன்றைய அபிப்பிராயத்தை அநுசரித்து எழுதப்பெற்றிருக்கும் பகுதி சரியானதென்றே கருதுகின்றேன். இந்நூலில் இன்னும் சேர்க்கக்கூடிய முக்கியமான குறிப்புகளையோ, திருத்தங்களையோ அறிஞர் எமக்கு அறிவிப்பின் அவை அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்நூல் வெளிவருவதற்கு உறுதுணையாயிருந்த எனது நண்பரும், ஒரு சாலை உடனாசிரியருமாகிய திரு. வெ. திருநாவுக்கரசு (B. A.) அவர்களுக்கு யான் பெரிதும் கடப்பாடுடையேன். நன்முறையில் அழகுற இது அச்சுப் பெறுவதற்குதவிய சுதந்திரன் அச்சகத்தார்க்கு எனது நன்றி உரியது.

தமிழ் மாணவர்களுக்கு, கட்டுரை எழுதுவதில் இந்நூல் நற்பயன் தருமேல் அதுவே எனக்கு மகிழ்வு தருவதாகும். தமிழ் மொழிப் பாடத்தின் மற்றைய அம்சங்களை இதன் தொடர்பாகப் பின்னர் வெளிப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய விருப்பம். ஆசிரிய உலகம் எனது முயற்சியை ஊக்கப்படுத்தி இதிற் துணை புரியுமென்று நம்புகிறேன்.

வி. சீ. கந்தையா.

சிவானந்த வித்தியாலயம்,
மட்டக்களப்பு.
26—1—50

பொன்னுரை.

Mahavidwan,
Pandit. E. Periyathambipillai,
Government College,
Batticaloa.

பொருள் பொதிந்த சொற்களை நிரல்பட அமைத்துச் சொல்லுதலும், எழுதுதலும் வல்லாரை உலகம் விரைந்து பின்பற்றுமாதலின், கட்டுரை வன்மையுடையராதல் மக்கள் யாவர்க்குஞ் சிறந்ததோர் அணிகலனாகும். இவ்விரண்டனையும் இலக்கண முறையில் விரித்துரைக்குந் தமிழ் நூல்கள் மிகச் சிலவே உள்ளன. இத்துறையில் ஆக்கப்படும் நூல்களும் காலப்போக்கிற்கும் நோக்கிற்குமேற்பச் சற்று நெகிழ்ச்சியுடையனவாகவும் அமைதல் இன்றியமையாததாகும்.

தமிழ் நடை கைவரப்-பெற்ற நல்லறிஞர் பலர் வசன நூல்கள் எழுதினாரன்றிக் கட்டுரை வகையியல் வகுத்தாரல்லர். இதனால், பிற்காலத்து உரை நடை எழுதப் புகுந்தோர்பலர் தத்தம் போக்கிற் சென்று வரையறைக் கட்டுப்படாராயினார். மரபு கடந்த பல வசன நடைகள் தமிழில் இடம் பெறுவனவாயின.

இக் குறைபாடுகளையெல்லாங் களைந்து கட்டுரை வன்மைக்கு ஒருவரையறை காட்டி வழி செய்தற்கெழுந்தது இந்நூல். இதனை இயற்றியவர் கலைபயிலறிவு கட்டுரை வன்மை முதலிய நல்லியல்புகளமைந்த பண்டிதர் திரு. வி. சீ. கந்தையா என்பார்.

ஆசிரியர் இந்நூலகத்தே, கட்டுரை என்பது இன்னதென்பதையும், சிந்தனைக் கட்டுரை, வருணனைக் கட்டுரை, வரலாற்றுக் கட்டுரையென்னும் அதன் வகைகளையும், இக்காலத் தமிழ் நடைகளிற் கொள்ளத்தக்கன எவை தள்ளத்தக்கன எவை என்பதையும் இனிது விளக்கியுள்ளார். அன்றியும், கட்டுரையெழுதுவோர் சிந்தனை செய்தற்குரிய வாயில்களையும், குறிப்புகள் எழுதிக்கொள்ளுவதற்குரிய வழிகளையும், நெறிப்பட வரைதற்குரிய படிமுறைகளையும் வகுத்-துரைத்துள்ளார்; இலக்கண மரபுகளைக் கைக்கொள்ளல், குறியீடுகளிடுதல், எழுத்துப் பிழை களைதல், இன்றியமையாதபோது பிற மொழிச் சொற்களை அமைத்துக்கொள்ளுதல், முதலியவற்றை மிகவும் அழுத்தமாக வற்புறுத்தியுள்ளார். கட்டுரையாளர்கள் தத்தம் கலைத் தொடர்ச்சிக்கேற்ற விடயங்களைத்தெரிந்து கொள்ளல் வேண்டும் என்பதும் ஆசிரியரின் உள்ளக் கிடக்கை. நூலின் இறுதியில் மாதிரிக் கட்டுரைகளும், பயிற்சி அப்பியாசங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. நூலாசிரியரது தமிழ் நூற் பயிற்சியும், ஆங்கில அறிவும் இந்நூலை இயற்றுதற்குப் பெரிதும் உபகாரமாயிருந்திருக்கின்றன. ஆசிரியரது சேவையை யான் நன்கு பாராட்டுகின்றேன்.

நிகழ் காலத்திலும், எதிர் காலத்திலும் ஒப்ப வழங்குதற்கேற்ற இந் நூலானது கட்டுரை யெழுதப் பயில்வார்க்கோர் சிறந்த கருவியாயமைந்து, அவர்தம் சிந்தனா சக்தியையும், கருத்து வெளியீட்டையும் விருத்தி செய்து,

"விரைந்து தொழில் கேட்கு ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"

என்னுந் திருக்குறளுக்கு அன்னாரை இலக்கியமாக்க வல்லதென்பது எனது அபிப்பிராயம்.

ஏ. பெரியதம்பிப்பிள்ளை.

27—4—50.

அணிந்துரை

K. Kanapathipillai, B. A., F. R. G. S. Trained First,
Vice Principal,
Sivananda Vidyalaya,
Baticaloa.

'பண்டிதத் தமிழ்' என்றால் எவரும் பயந்து ஓட்டம் பிடிக்கின்ற இக்காலத்தில், பரீட்சைகளிற் சித்தியெய்தும் அவாவுடைய மாணவருக்கும், தமிழ்மொழி உரைநடையில் பயிற்சி பெற்றுத் திருத்தமாகவும் தெளிவாகவும் தங்கள் எண்ணங்களை இலகுவான தமிழில் வெளியிட விருப்பமுடைய தமிழ் மொழிப் பற்றுடையவர்களுக்கும் பயனளிக்கக்கூடிய முறையில் மிகவும் எளிய தூய நடையில்; மதுரைத் தமிழ்ச் சங்கம், யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் ஆகிய இரு சங்கங்களின் பண்டித பரீட்சைகளிலும் தேறிய ஒருவர் கட்டுரை எழுதுதல் என்னும் பொருள் பற்றி' ஒரு நூல் எழுதியுள்ளார் என்பது உண்மையில் ஆச்சரியப்படத் தக்க ஒரு விஷயமே. ஆனால் பண்டித வி. சீ. கந்தையா அவர்களை அறிந்தவர்களும், அன்னாரால் ஆக்கப் பெற்ற பாடல்களையும், கட்டுரைகளையும் படித்தவர்களும் அவருடைய பாண்டித்தியத்தை அவரின் தூய எளிய இனிய உரைநடை, பொருட்செறிவின் ஆழம் என்பவைகளின் வாயிலாக அறிந்துகொள்வர். சமீபத்தில் நம் மத்தியிலிருந்து பரகதியடைந்த ஸ்ரீமத். சுவாமி விபுலாநந்தரின் பிரிய மாணவர்களில் இந்நூலாசிரியரும் ஒருவர் என்பது, இவருடைய கட்டுரைகளைச் 'செந்தமிழ்', 'குமரிமலர்', 'கலைமகள்', 'ஈழகேசரி, போன்ற

வெளியீடுகளில் படித்தவர்களுக்குத் தெற்றெனப் புலப்பட்டிருக்கும். "பாண்டியன் தமிழ்" (Kings' English) என ஒரு சிறந்த உரைநடை தமிழில் தோன்றுவதற்கு மிகவும் உதவியாக இந்நூல் இருக்குமென்பதில் சந்தேகமில்லை. இக்காலத்தில் தமிழை இனிக்கச் செய்யும் பண்டிதர்கள் வெகுசிலரே. அவர்களுள் ஒருவராக இன்று சிறந்து விளங்கும் வி. சீ. கந்தையா அவர்களின் இம் முயற்சி தமிழ்க் கலை பயிலும் மாணவரனைவருக்கும் மிகமிகப் பயனளிக்கும் என்றே நான் திடமாகக் கருதுகிறேன்.

தமிழறிவும் ஆங்கில அறிவும் ஒருங்கே அமையப் பெற்று, அநேக மாணவர்களை S. S. C., H. S. C., போன்ற பரீட்சைகளில் உயர் (Distinction) தரத்தை அடையச் செய்த படிப்பித்தல் அநுபவ முதிர்ச்சியினுற் போலும் பண்டிதரவர்களின் இவ்வரிய பயிற்சி நூல் 'மூன்' 'மக்கே' (Moon and Mackay) போன்றுரரது அரிய ஆங்கிலமொழிப் பயிற்சி நூலை ஒத்திருக்கின்றது.

சொல்லாட்சி, நடை, பொருட் பொதிவு, ஓசை உடைமை, அலங்கார அமைப்பு, கற்பனைச் செறிவு, பாவம் இவையாவும் செய்யுளுக்கு மாத்திரமன்றி உரை நடைக்கும் உரிய சீரிய, இலக்கணங்கள், இவற்றைத் தமது வியாசங்களுட் செலுத்தி உரைநடைப் பயிற்சி பெறுவதற்கு மாணவருக்கும், ஏனைய தமிழபிமானிகளுக்கும், இளம் எழுத்தாளர்களுக்கும் இந்நூல் மிகவும் பயனளிக்குமாகையால், இதனை யாவரும் மனமுவந்தேற்று, இதிலிருந்து பலனடைவார்களென்றும், தமிழில் நல்ல கட்டுரைகளை (Essays) புனைவதற்கு இந்நூல் மிக உதவியாக இருக்குமென்றும் நான் நம்புகின்றேன்.

28-4-50 **க. கணபதிப்பிள்ளை.**

1. கட்டுரை விளக்கம்

கட்டுரை எழுதுதல் எல்லாப் பாடசாலைகளிலும் ஒரு கட்டாய பாடமாகும். பாஷையும் வியாசமும் எனும் பாடத்தில் முக்கிய பகுதியாக இது அமைதல் எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவானதொன்று. ஒரு பாஷையில் உள்ள அறிவைப் பரிசோதிக்கும் சிறந்த ஒரு வழியாக இதைப் பரீட்சகர்கள் கொள்கிறார்கள். எழுதும் விஷயத்தைப்பற்றிய அறிவு ஒரு பாலாக, பாஷை நடை, எழுதும் ஆற்றல், இலக்கண அமைதி, சொல்லாட்சி எனும் பல மொழித்திறம் காட்டும் அம்சங்கள் கட்டுரை எழுதுதல்மூலம் பரீட்சிக்கப்படுகின்றன. இதனால் இலக்கணக் கேள்விகளைக் கேட்டு மாணவரை மடக்குவதிலும், சிறந்த கருவியாக இதை இலங்கை வித்தியாபகுதியார் கண்டு அதிகப்படியான புள்ளிகளையும் இதற்கு அளித்து வருகிறார்கள்.

எனவே: பாஷையிற் சித்திபெறவேண்டிய மாணவர் கட்டுரை எழுதுவதிற் தம்மை நன்கு பயிற்றிக்கொள்ளுதல் அவசியமாகின்றது.

1. குறிக்கோள்

தமது வகுப்புக்கேற்ற மொழிநடை முதலிய அம்சங்களையும், விஷயத்தை அலசி விளக்கும் முறைகளையும் மாணவர் நன்கு அறிய வேண்டியவர்களாகின்றனர். தரப்படும் பல விஷயங்களிலிருந்து எழுதுவதற்காக ஒன்றைத் தெரிவு செய்

வதிலும் மாணவர்கள் அவதானிக்கவேண்டிய குறிப்புகள் சிலவுண்டு. இப்படியானவற்றில் மாணவர்களுக்கும், இன்னும் எழுதப் பயில்வோர்க்கும் உதவியான குறிப்புகளைத் தொகுத்துக் கூறுதலே எமது நோக்கமாகும். மாணவரைக் கட்டுரைகள் எழுதுவதில் திறமையுடையச் செய்து பகிரங்கப் பரீட்சைகளில் இலகுவாகச் சித்திபெறுவிப்பதே இந்நூலின் முக்கிய நோக்கமாகக் காணப்படினும், தொடர்ந்து அவர்கள் இன்னும் எழுதுவதை விடாது வளரவும் இது அத்திவாரமாயிருக்குமென்பது இவ்வகையில் எம்மனுபவபூர்வமான எண்ணமுமாகும்.

2. கட்டுரை வகை

கட்டுரைகள் சிந்தனைக் கட்டுரையென்றும், வருணனைக் கட்டுரையென்றும், வரலாற்றுக் கட்டுரையென்றும் பலதிறமுடையனவாயினும், அவை யொவ்வொன்றின் இலக்கணமும் விளக்கமும் மாணவர்கள் இங்கு அறிந்திருப்பது மிக அவசியமானதொன்றல்ல. கட்டுரைப் பொருள்பற்றி மட்டுமன்றி எழுத்தாளர்களுடைய கொள்கைக்கேற்பவும் மாறுபடும். அவற்றை அதிகம் இங்குச் சிந்தியாது, அதிலும் மிக முக்கியமான சிலவற்றை மட்டும் குறிப்பிட்டுச் செல்ல விரும்புகின்றேன்.

3. பத்திரிகை படித்தல்

நிறைந்த வாசினை, கட்டுரை எழுதுவதற்கு வேண்டிய முன்னறிவைத் தருவது. பலவேறு எழுத்தாளர்களுடைய கட்டுரைகளும், புத்தகங்களும் படிக்கவேண்டும். வெளிவருகின்ற பத்திரிகைகளில் சிலவற்றையாவது தெரிவுசெய்து மாணவர் படித்துவருதல் அவசியம். உலகியல் நடைமுறைகள், அரசியற் புரட்சி, மாற்றம், போர் முதலியவைகள்,

இலக்கியக் கட்டுரைகள், இலக்கிய விமரிசனங்கள், சிறுகதைகள், கவிதைகள் என்பனவெல்லாம் அவசியம் கொஞ்சம் கொஞ்சமாவது ஒழுங்காக வாசித்து வரவேண்டும். பழைய இலக்கியக் காலம் போலன்றி இப்போது புதுப் புது மலர்ச்சிகளெல்லாம் நம் மொழியிடைத் தோன்றியிருக்கின்றன. சரளமான நடை, விறு விறுப்பான போக்கு, கவர்ச்சிகரமான வருணனைகள், காரசாரமான கண்டனங்கள், புதுமையான தலையங்கங்கள், தெள்ளத் தெளிந்த மொழி, ஆழமும் இலகுவுமான கருத்துக்கள் இவையெல்லாம் பொருந்திய பிரபல எழுத்தாளர்கள் பலர் நம் இலங்கையிலும், இந்தியத் தமிழகத்திலும் இப்புதுயுகத்தில் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் தமிழ் வசன நடைக்குப் புத்துயிர் கொடுத்து வருகிறதைப் பத்திரிகைகள், புது வெளியீடுகள் எதுவும் படியாதவர்கள் உணர முடியாது. இத்தகைய சேவையே இன்றையத் தமிழ் நடைக்கு வேண்டியதுமாகும்.

4. தமிழின் மறுமலர்ச்சி

சங்க காலமெல்லாம் செய்யுள் நடை வளர்ந்தது. பின்னும் தொடர்ந்து, தமிழில் வெளியான நூல்களெல்லாம் செய்யுள் ரூபமானவையே. அதனாலேதான் இன்று பழந்தமிழ் அருமையைப் பலர் அறியமுடியாமலும், அறிய முயற்சியாமலும் இருக்கிறார்கள். கவிதையையும், கனிந்த நடை வசனத்தையும் ஒன்றாகக் கண்டுசென்ற பாரதியின் காலம் தமிழுக்கு ஒரு மதிப்புக் கல்லாக இருக்கிறது. அதன் பின்னரே தமிழ் வசன நடை வளர்ந்தது எனலாம். ஆறுமுக நாவலர், சாமிநாதையர், போன்ற பெரியோர் தமிழ் வசன நடைக்கு உயிர் கொடுத்தனர். தொடர்ந்து சிறு கதைகளும், கட்டுரைகளும், நாவல்களும் நல்ல தமிழில் வெளிவரத் தொடங்கின. மாத வெளியீடு

களும், ஆண்டு மலர்களும், வார வெளியீடுகளும், தினக் கதிர்களுமாக வெளிவரத் தொடங்கிய பல தமிழ் மலர்களும் வெவ்வேறு வகையில் வசன நடைக்கு மறுமலர்ச்சி தந்தன. புதுப்புது எழுத்தாளர்களின் தோற்றமும், நன்முறையில் நூல் பதித்து வெளியிடும் அச்சகங்களும் உண்டாயின. நல்ல நாவல்கள் தமிழில் இல்லையென்ற குறையைப் புதிய சில சரித்திரத் தொடர்பான கற்பனை நூல்கள் தீர்த்துத் தமிழ் வசன நடைக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகியிருக்கின்றன. புது முறையில் கவிபாடும் புரட்சிக் கவிகளும் தோன்றி மொழியை வளம்படுத்துகின்றனர். சிறுகதைக் காலமென்றும், 'நாவல்'காலமென்றும் அறிஞர் கூறும் இந்நூற்றாண்டு, தமிழ் வசன நடைக்காலமாக விளங்கித், தமிழின் சரித்திரத்திலும் ஒரு முக்கிய இடம்பெறப் போகின்றது. காலத்துக்கேற்ப நாம் வாழ வேண்டுமல்லவா! ஆதலால் எவரும் வசன நடையின் நயத்தையும், பலத்தையும் உணர்ந்து தம்மையும் இதில் வல்லுநராக ஆக்கித் தம் கருத்தை இலகுவில் மற்றையோருக்கு வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்வேண்டும் என்பது குறித்துப்போலும், நம் வித்தியா பகுதியினர் கட்டுரை எழுதலுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர். இலங்கைப் பல்கலைக் கழகப் பிரவேச பரீட்சைக்கும், H. S. C. பரீட்சைக்கும் ஆன விசேஷ வினாப்பத்திரமொன்று—தமிழ், சிங்களம், ஆங்கிலம் இவற்றுள் விரும்பும் ஒரு மொழியில்–கட்டுரை எழுதுதலாக இருத்தல் குறிப்பிடத்தக்கது. எனவே இன்றைய பத்திரிகைகள், நூல்கள் இவற்றில் கூடியவரை வாசித்து, அறிவோடு மொழி நடையையும் மாணவர் விருத்திசெய்ய வேண்டுமென்று இதனால் அறிவுறுத்துகின்றேன்.

5. பத்திரிகைத் தமிழ்

பத்திரிகை வாசித்தலைக் குறிப்பிடும்போது மாணவர்கள் அவசியம் நினைக்கவேண்டியதொன்று, பத்திரிகைத் தமிழை ஒருபோதும் பின்பற்றக் கூடாதென்பது. தமிழுக்கு மட்டுமன்றி, மற்றைய மொழிகளில் எழுதும் மாணவருக்கும் இக்குறிப்புப் பொதுவானது. பத்திரிகை மொழி ஒரு குறித்த தரத்தில் ஒருபோதும் இருப்பதில்லை. கிராமியப் பேச்சுகளில் கதை, கட்டுரைகளை அப்படியே பல பத்திரிகைகள் வெளியிடுகின்றன. இயற்கை நிகழ்ச்சிகளை எடுத்து அப்படியே பாமர மக்களுக்கும் காட்டும் நோக்கமே அக்கதைகள் கட்டுரைகள் கொண்டனவன்றி மொழி நடையைத், தரப்படுத்துவதல்ல. பத்திரிகாசிரியர்கள் தெளிந்த நடையில் எழுதும் பகுதி நோக்கி, அப்பத்திரிகை முழுவதையும் மொழி நடைக்கு நோக்க வேண்டாமென்பதே மாணவர்களுக்கு நாம் இதனால் எச்சரிப்பது. இக்காலத்தில் வெளிவரும் பத்திரிகைகள் சில நம் தமிழ் நடைக்குக் கேடுதரும் முறையிலுள்ள கட்டுரைகளையும் வெளியிடுகின்றன. அவற்றைப் படித்து அங்குக் காணும் தமிழுக்கே புதியனவான சொற்களை எடுத்தாண்டு மாணவர் சிலர் தம் கட்டுரைகளைக் கெடுத்துக்கொள்வது தவிர்க்கப்பட வேண்டும். இந்தியவெளியீடுகளில் குமரிமலர், கலைமகள், கல்கி, சக்தி இவைபோன்ற இன்னும் ஒரு சில சஞ்சிகைகளிலேயே குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களது நல்ல நடைகளைக் காண்கின்றோம். அவற்றைத் தனித்தனி காட்டல் இங்கு ஒவ்வாதாதலால் மாணவர் தம் ஆசிரியர் துணையுடன் அவ்வாறானவைகளைத் தெரிவுசெய்து வாசித்துப் பயனடைவாராக.

நம் நாட்டில் நல்ல தமிழ்ச்சொற் பிரயோகங்களைக் கிராமப்புறங்களிலே பரக்கக்காணலாம். பல்

வேறிடமிருந்தும் வருகின்ற மக்கட் கூட்டத்தால் கலப்புற்று மாறுபட்டு வழங்கும் வியாபாரப் பாஷைகள் மொழிநடைப் பயிற்சிக் கொவ்வாதவை. இத்தகைய கலப்புமொழி ஓரிடத்து வழங்குவது இன்னோரிடத்து வழங்காதாதலால், பொதுவான செந்தமிழ் நடையையே நல்ல எழுத்தாளர்களும், ஆசிரியர்களும் கொள்கிறார்கள்.

6. செந்தமிழ்

'செந்தமிழ்' என்றவுடன் 'கடுந்தமிழ்' என்று விளங்கிக்கொள்வது பிழை. ஆனால் செந்தமிழ் என்பது தமிழர் யாவர்க்கும் பொதுவான தமிழ் மொழி. மட்ராஸ் தமிழ், திருநெல்வேலித் தமிழ், யாழ்ப்பாணத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ் என்ற வேற்றுமை எதுவுமின்றித் தமிழர் எல்லோர்க்கும் விளங்குகின்ற எளிய இனிய பொதுத் தமிழே நாம் குறிப்பிடுகின்ற செந்தமிழ் மொழியாகும். இத்தமிழிலேயே மாணவர்கள் கட்டுரைகளை எழுதவேண்டியது அவசியமாகின்றது.

7. கிராமியச் சொற்களும் கடுந்தமிழ்ப் பதங்களும்

சிறந்த தமிழ்ச் சொற்களெல்லாம் உருத்திரிந்து நாட்டுப்புறங்களில் வழக்குகின்றன. இவற்றை நன்கு கூர்ந்து அவதானித்துக் கிராமப்புற மக்களுடைய பேச்சுக்களிலிருந்து அவற்றைப் பெற்றுப் புதுக்கி நாம் உபயோகத்துக்குக் கொண்டுவரவேண்டும். கிராமிய மொழித் தொடர்கள் அப்படியே எழுதப்படுதல் பரீட்சைகளில் கண்டிப்பாக நீக்கப்படவேண்டும். இன்றியமையாத சந்தர்ப்பங்களில் இவற்றை உபயோகித்தால், அடைப்புக்குறியுள் அத்தகைய தொடர்களுக்குரிய நற்றமிழ் குறிக்கப்படுதல் அவசியமாகும். கிராமிய மொழிகளைப் போலவே, மிகக் கடுந்தமிழ் நடையும் பின்பற்றக்கூடாததொன்று. கடுஞ்சொற்பிர

யோகித்தலைச் சில மாணவர் பெருமையாகக் கொள்கிறார்கள். கால நோக்கில் அது பயன்பெறாததென்பதை உணர்ந்து அன்னார் நீக்கி இலகுவான நடை கொள்ளுதல் சிறந்த வழியாகும்.

கட்டுரை எழுதுதலில் பாஷை நடையைவிட முக்கியமான இன்னொன்று பொருளமைவு ஆகும்.

8. அறிவு நோக்கமும் ஆழ்ந்த சிந்தனையும்

'எழுத எடுத்கொண்ட பொருள் நன்கு எழுதப்பட்டிருக்கிறதா?' என்ற வினாவுக்கு 'ஆம்' என்ற விடையைப் பெறக்கூடியவரை முயற்சி செய்யவேண்டியது மாணவர் கடமை. குறித்த விஷயத்தைப்பற்றி நன்கு சிந்தித்துக் குறிப்புகள் எடுத்துக்கொள்ளுதல் இதில் வெற்றியை அளிக்கும் வழியாகும். நிறைந்த சிந்தனை பழைய நினைவுகளை மீட்டு எண்ணங்களைக் கிளறிப் பொருளைத் தருகின்றது. ரசிக்கும் தன்மையை விருத்திசெய்து அறிவுக்கண்கொண்டு எவற்றையும் நோக்கவேண்டும். அப்போது செயலற்றுக்கிடக்கும் கற் துண்டுகளும், சிறு துரும்பும் எல்லாம் நமக்கு எழுத எழுத விரியும் பெரும் பொருள் பொதிந்த கட்டுரைத் தலைப்புகளாகும். பெரிய பெரிய எழுத்தாளர்களையெல்லாம் இயற்கை தோற்றுவித்தது, அன்னார் தம் ரசிகத்தன்மையும், அறிவுக் கண்ணோக்கும் கொண்டேதான். கவிஞன் பாரதியினுடைய கட்டுரைகளிற் பல நமக்கு இதில் சான்று பகரும். ஒரு பந்தலில் தொங்கிக்கொண்டிருந்த கயிற்றுத் துண்டுகள் அவனுடைய அகக்கண்ணில் சம்பாஷித்தன. ஒன்று கந்தன், மற்றது வள்ளி என்கிறான் அவன். அவை காற்றில் ஊசலாடுவது, ஒன்றையொன்று கட்டியணைக்கத் துரத்துவதாக அவன் நம்முன் காட்டுகின்ற போது, நமது சிந்தனைச் சக்தி ஏன் அப்படிப்போக

முன் வராது? பாரதியாரது கட்டுரைகளிலிருந்து இப் பகுதியை ஒரு வகுப்பில் நான் ஓர்முறை படித்து விளக்கினேன். பின்பு, பக்கத்துப் பூஞ்செடியின் கிளை யொன்றில் சிலந்தி நூலில் தொங்கி ஊசலாடிக்கொண் டிருந்த சருகு ஒன்றைக் காட்டி அது சொன்னதாகக் கற்பித்து எழுதும்படி கேட்டபொழுது மாணவர்களிற் பலர் ஆச்சரியப்படத்தக்க முறையில் திறம்படக் கற் பித்து வரைந்திருந்தனர். இதனால் சிந்தனை சக்தியின் பலம் விளங்குகின்றது.

சிந்திக்கும்போது ஒன்றைச் சார்ந்து மட்டும் அன்றி, எதிர்ப்பக்கத்து நின்றும் ஆராய்தல் மேலும் அறிவைப் பெருக்குவது. உயர்தர வகுப்பு மாணவர் கள் இதில் அவசியம் கவனமெடுக்கவேண்டும். உதா ரணமாக '**மறதி**'—என்று ஒரு தலையங்கத்தை எடுத் துக்கொள்வோம். எல்லோரும் சொல்வதுபோல் "மறப்பெனும் பகைவன் வாரிக்கொண்டனன்" என்று மறதியைப் பகைவனாக நினைந்து அதன் தீமைகளை மட் டும் எழுதாது; அதன் நன்மைகளையும் எழுத முயற் சிக்கவேண்டும்: 'மறப்பு இன்றேல் உலகம் இல்லை, என்த் தக்கதாய் மறதி அவ்வளவு நன்மையையும் நமக்குச் செய்கின்றது. ஒருவன் நமக்குச் செய்த தீமையை நாம் மறக்கமுடியாவிடில் நாம் அதனால் பாவச் செயலுக்காளாவோம். அரசர்கள் தமக்குள் கோபத்தை மறந்து வாழமுடியாவிடில் உலகில் சமா தானமில்லை. ஒருமுறை நாம் கேட்ட இசைக்கீதம் மறதியில்லாமலிருப்பதானால் இசைத் தட்டுக்களேன்? ஒரு முறையிலேயே பார்க்கும் சினிமா நினைவுகளை நாம் மறக்கமுடியாமலிருப்பதேல் சினிமாக் கலை வள ருமா? ஒருமுறை கேட்ட பாடம் மறக்கமுடியாமலிருக் குமானால் அச்சியந்திரங்களும், பாடபுத்தகங்கள் அச் சுப் போடுதலும் அவசியமற்றனவாகின்றன'—இப்

படியாக எழுதிக்கொண்டே போனால் மறப்பும் இயற் கையாய் அவசியமானதொன்று என்று காணவரும். இப்படி விமரிசன ரீதியில் எழுதும் பயிற்சியை மாணவர், தம் படிவளர வளரக் கூட்டிக் கொள்ளவேண்டும். எதற்கும் ஆழமான சிந்தனை அவசியமென்றாகின்றது.

9. குறிப்புகள் எடுத்துக்கொள்ளல்

பொருளை நன்கு சிந்தித்த பின்னர் அவ்வப் போது வேண்டிய குறிப்புக்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். முறையான ஒரு ஒழுங்கில் தலைப்பு விளக் கப்படுவதற்கு இதுவே ஏற்றவழி. பாகம் பாகமாகப் பிரித்து எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றையும்பற்றி வெவ்வேறு பந்திகளில் ஒழுங்காக எழுதவேண்டும். '**தென்னை மரம்**' என்று ஓர் கட்டுரை தந்தால் அது பின்வருமாறு பகுக்கப்படலாம்:

I. மரம்.

1. அடி, 2. நடு, 3. வட்டு அல்லது முடி.

II. மரம் உண்டாக்கல்

1. சுவாத்தியம், 2. நிலம், 3. பாதுகாப்பு, 4. பிரயோசனம் பெறல், 5. நாம் அடையும் பயன்கள்.

வகுப்புநிலை நோக்கி மேல் வகுப்பு மாணவர் பின் வருவனவற்றையும் சேர்த்துக்கொள்ளலாம்.

I. தென்னைப் பிரயோசன வியாபாரம்.

1. உலகின் தென்னை விளை தேசங்கள்.
2. வியாபார நாடுகள்.
3. வியாபார முறைகள்.

II. கைத்தொழிற் பொருட்கள்.

1. தும்பு, 2. சிரட்டை, 3. ஈர்க்கில் என்பவையும் அவற்றால் பெறும் பொருட்களும்.

III. தென்னைபற்றிப் பண்டை நூற் குறிப்புகளும், மேற்கோள்களும்.

1. 'வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தருதல்'.

2. இடையாயார் நட்புக்குவமையாதல் முதலியன.

கேட்கப்பட்ட அளவு நோக்கி இக்குறிப்புகளெவ்வொன்றும். சுருக்கியோ விரித்தோ எழுதப்படல் வேண்டும். ஒரே விஷயம் எல்லா வகுப்பு மாணவர்களாலும் எழுதப்படலாமாதலால், தரத்துக் கேற்பப் பொருட்செறிவு வேண்டும். 'பசு' என்பதைப்பற்றி எழுதக்கேட்டால், ஆரம்ப வகுப்பு மாணவர்கள்போல் 'பசுவுக்கு நாலு கால்' என்று ஒரு நடுத்தர வகுப்பு மாணவரோ உயர்தர வகுப்பு மாணவரோ எழுதுதல் பொருந்தாது. 'இரட்டைக் குளம்புடையனவாய் சற்றுக் குறுகிய முன் காலிரண்டும், நீண்டு பலம் பொருந்திய பின் காலிரண்டும் பசுவின் பெரிய உடலைச் சுமந்து நிற்கின்றன' என்றோ, அன்றி ஏற்றவேறு அடையும், சிறந்த பொருளமைவும் கொண்டோ அதே வசனம் எழுதப்படலாம் நல்ல அடைமொழிகளும், உவமைகளும் கையாளப்படுதல் விஷயத்தை நன்கு விளக்க வழியாகும். ஆயினும் இவை அளவுகடந்து நிறைந்திருத்தல் சிறப்பாகாது அடைமொழிகளை அனுவசியமாகத் திணிக்க முயற்சிப்பதும், ஒன்றை விளக்கவேண்டாத பல சொற்களைக் கையாடலும் நீக்கப்பெறுதல் வேண்டும்.

பொருளடக்கத்தைப் போலவே; முகவுரையும் முடிவுரையும் கட்டுரையில் முக்கியமானவையாகும்.

10. முகவுரையும் முடிவுரையும் எந்த ஒரு விஷயத்தைப்பற்றியும் எழுதப் புகுமுன், அதை அறிமுகப்படுத்தி வைப்பது போன்று சில கூறவேண்டும். பின்னால் விளக்கப்படும் பொருளைச் சுருக்கி அடக்கமாக முன்னுரைத்துப் பின்னால் விஷயத்துள் இறங்குதல் வாசிப்போர்க்குக் கவர்ச்சியையும், ஆர்வத்தையும் கொடுக்கும். வருணனைக் கட்டுரைகளிலும், கதைகளிலும் திடீரென்று ஆரம்பிப்பது ஒரு புதுமுறை. அவ்வாறு திடீரென்று தொடங்கிச் சில கூறி நிறுத்திப், பின் விஷயத்தை முதலிலிருந்து தொடங்கிப் போகலாம். அப்போது, முன்னால் நாம் விட்டபகுதியே முகவுரையாகி விஷயத்தை ஆர்வமாகப் படிக்கச்செய்யக்கூடிய வகையில் இருக்கவேண்டும். இதுபோலவே சிறந்த முறையில் முடிவும் அமைதல் அவசியமாகும். கட்டுரையில் விவரித்தவெல்லாம் அடக்கி, எழுதுவோரது அபிப்பிராயத்தையும் வேண்டுமிடத்துக் காட்டி நன்கு முடிக்கவேண்டும். படித்ததைப் பதிப்பது போல் திரட்டிமுடிப்பதும், சம்பாஷணை போன்றவற்றில் முடிவை விளக்கிக்காட்டல்போல் முடித்தலும், செய்யுள் பழமொழி மேற்கோள் வாக்கியம் என்பவை கொண்டு முடித்தலும், வாழ்த்தி முடித்தலுமாகக் கட்டுரைக்கேற்ப முடிவுரையும் பொருத்தமாயிருக்கக் கவனித்தல் ஏற்புடைத்து. முகவுரையிலிருந்து விஷயத்துள் எவ்வாறு தொடர்பாக இறங்கினோமோ, அப்படியே விஷயத்திலிருந்து முடிவுரை மூலமாக மெல்ல நாம் வெளியேறத்தக்கதாக முடிவு அமைதல் சிறப்பாகும்.

இனிக், கட்டுரை எழுதும்போது சிறு சிறு வாக்கியங்களாக எழுதக் கவனிக்கவேண்டும். இது மாணவர் இயல்பாக விடுகின்ற பல பிழைகளிலிருந்து திருத்தி நல்நடை நல்கும். தொடர்களில் எழுவாய் பயனிலை முடிபுகள் பொருத்தமாயிருத்தல் வேண்டும். நீண்ட வசனங்கள் எழுதுவதால் தொடக்கத்துக்கேற்ப முடிவுசெய்ய முடியாமல் பல மாணவர் முட்டுப்படுகின்றனர். எழுவாயினுடைய திணை; பால் முதலியன மாறாவகை வினைமுடிவு பெறவேண்டும். 'அவைகள் வந்தது' என்பதுபோன்ற ஒருமை பன்மை மயக்கக்கள் ஒருபோதும் எழுதல் கூடாது. கட்டுரையில் எழுதும் காலம் நெடுக மாறாமலிருக்கவேண்டும். தொடர் நிகழ்ச்சி ஒன்றைக் கூறுகையில், தொடக்கத்தில் இறந்த காலத்தில் குறிப்பிட்டுத் தொடங்கினால் அதிலேயே தொடர்பாகப் பேசல் இலக்கண மரபு. இலக்கண நியதி தவறாமல் கட்டுரைகள் எழுதுவதற்குக் கூடியவரை முயற்சி செய்யவேண்டும். முன்னால்கூறிய அதே பொருளைப் பின்னோரிடத்தில் அனாவசியமாக எழுதுவது 'கூறியது கூறல்' என்னும் குற்றத்தின் பாற்படுத்தும். கூடியவரை சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் (Short and Sweet) முறையைக் கையாள வேண்டும். ஒரு குறித்த அடைமொழிகளையே அதிகம் உபயோகித்தல் கூடாது. ஒரு பொருளுக்குப் பல்வேறு சொற்களிருப்பின், ஒன்றையே பலமுறை கூறாது வெவ்வேறு சொற்களைக் குறித்தல் மாணவரது சொல்லாட்சியைக் காட்டும். மற்றையோருடைய கருத்துக்களை அவர்களுடைய வார்த்தையைக் கொண்டே நம்மதுபோற் காட்டல் பெருங் குற்றமாகும். நமக்கும் உடன்பாடானால் அக்கூற்றுக்களைக்

11. இலக்கண மரபு முதலியன

காட்டி நிலை நிறுத்தலாம். அல்லது நமது சொந்த வசனத்தில் அக்கருத்தை எழுதி விளக்கலாம்.

மாணவர்கள் கவனிக்கவேண்டிய இன்னொன்று குறியீடு செய்வது (Punctuation). எழுத்தாளனுடைய மனக்கருத்தை, அழுத்திக்காட்ட உதவுவது குறியீடுகள்தாம். 'பாரதியார்' என்னும் பெயர்ச் சொல்லுக்கும், 'பாரதி யார்?' எனும் அதே சொல்லாலாகிய வினாத் தொடருக்கும், வினா அடையாளமே வித்தியாசம் காட்டுகிறதல்லவா? நிறுத்தவேண்டிய இடங்களில் அவசியம் நிறுத்தி வாசிப்பதுதான் பொருளைத் தெளிவுபடுத்தும். இவற்றுக்கான குறிகளை மாணவர் ஒருபோதும் மறக்கக்கூடாது. அவ்வாறான குறியடையாளங்களை முன்னோர் கருத்துப்படி இங்குக் காட்டுகின்றேன்.

12. குறியீடு

(1) , —காற்புள்ளி (Comma)- இங்கு ஒரு மாத்திரை நிறுத்தவேண்டும். (ஒரு மாத்திரை என்பது ஒருமுறை கை நொடிக்கும், அல்லது கண் இமைக்கும் நேரம்).

(2) ; —அரைப்புள்ளி (Semi colon)- இரண்டு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(3) : —முக்காற் புள்ளி (Colon)- இங்கு மூன்று மாத்திரை அளவு நிறுத்தவேண்டும்.

(4) . —முற்றுப்புள்ளி (Full Stop)- நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(5) ? —வினாக்குறி (Question mark or mark of interrogation)- கேள்வியைக் குறிக்கும். இங்கும் நான்கு மாத்திரை நிறுத்தம் வேண்டும்.

6) ! —வியப்பிசைக்குறி (Mark of Exclamation) அதிசயத்தினைக்காட்டும். இவ்விடத்துச் சந்தர்ப்பம் நோக்கி இரண்டு மாத்திரை முதல் ஆறு மாத்திரை வரை நிறுத்தலாம்.

(7) "....''—மேற்கோள் அடையாளம் (Quotation Marks)- பிற கூற்றை எடுத்தாளும் போதும், பிறர் கூறுவதுபோற் கூறும் போதும் இவை இடப்படவேண்டும் ('...' மேற்கோட் குறியின் ஒற்றையான இப்பாகம், பிறபாஷைச் சொற்களை நாம் உபயோகிக்கும் போதும் பிறர் சொல்லை நம்மதாக உபயோகிக்கும் போதும் இடுதல் வழக்கம்)

எழுதிக்கொண்டு போகும்போது புள்ளியெழுத்துக்களுக்குப் புள்ளியிடுதல் போன்று வசனப் பொருட் பொருத்தம் காட்டுதற்காய் இக்குறியீடுகளை இட்டுப் போம் பழக்கத்தையும் மாணவர் பயிற்சியிற் கொண்டு வரவேண்டும்.

எழுத்துப் பிழைகள் வசனத்தை அலங்கோலப் படுத்திப் படிப்போர்க்கு அலுப்பைத் தருவதாதலால், அப்பிழை நீக்கத்துக்கு மாணவர் உடனுக்குடன் முயற்சி செய்யவேண்டும். ஆசிரியர்களிடம் காட்டித் திருத்தம் செய்தபின், பிழைகளையும் அவற்றின் திருத்தங்களையும் நன்கு அவதானித்து மனதிற் பதித்துக்

கொண்டால் விரைவில் இக்குற்றம் நீங்கலாம். எழுத்துப் பிழைகள் குறித்த பொருளை மாற்றிவிடும் தன்மையனவுமாம்.

13. முக்கியமான எழுத்துப் பிழைகள் சில

'அவர்க்குக் கொடுத்தான்' என்பதை 'அவற்குக் கொடுத்தான்' என்றெழுதினால், 'அவற்கு' என்னும் பதம் 'அவனுக்கு' என்று ஒருமைப் பொருளைக் குறித்து எண்ணத்தை மாற்றிவிடுகின்றது. 'அளித்தான் எனும் பதம் (கொடுத்தான், காப்பாற்றினான்), 'அழித்தான்' (இல்லாமற் செய்தான்) என்று எழுதப்படும்போது பொருள் நேர்மாறாக இருக்கிறதல்லவ! இதுபோலவே 'கொண்டுவா' என்பதற்குப் பதில் 'கொன்றுவா' என்று அரசன் தடுமாறிச் சொன்னதால் சேவகர் கோவலனை வெட்டிவிட்டு வந்தார்களென்று கோவலன் கதையில் படித்திருக்கிறோம். சமயம், சமையம் இரண்டும் மாறாட்டமாக எழுதப்படுகின்றன. 'சமயம்'—(சைவம், கிறிஸ்து முதலிய) மதங்களைக் குறிக்கும் சொல், 'சமையம்'—நேரம் அல்லது தருணம் எனும் பொருளில் வரும் சொல் என்பதை அவதானித்து அப்பிழையை நீக்கவேண்டும். 'அதற்கு' எனும் பதத்தைப் பல மாணவர்கள் 'அதர்க்கு' என்றும், 'அதற்க்கு' என்றும் எழுதுகிறார்கள். 'பாற்க்குடம்', 'காட்ச்சி' 'ஏற்ப்புடையது' என்பது போன்ற பிழைகளும் சகசமாயிருக்கின்றன. ற், ட், போன்ற வல்லெழுத்துக்களின் மிகுந்த சத்தம் அடுத்து வரும் மெய்யெழுத்துக்களை ஒலிபெற வழியில்லாமற் செய்கிறதென்பதை மாணவர் மனதிற்கொள்ள வேண்டும். 'பால்க்குடம்' 'அலைகளில்ச் சில', 'தோல்ப்புரை', 'வாள்த்தடங்கண்' போன்ற புணர்ச்சிகள் இலக்கண முடிபு பெறாதன. சாதாரணமாகப் பேசும்போது இப்படித்தான் இச்சொற்களைப் பேசுகின்றோமென்பதற்காக, வலிந்து இப்படியேதான் எழு

துவும் வேண்டும் என்று கூறுவோர் சிலரும் இன்று உளர். 'பண்டை இலக்கண மரபையே கட்டிக்கொண்டு அழவேண்டும்' என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆயினும் எழுத்துச் சிக்கனமும், ஓசை நயமும் இலக்கண அமைதியும் பெறுதல் நோக்கிப் 'பாற்குடம்' 'அலைகளிற் சில', 'தோற்புரை', 'வாட்தடங்கண்', (வாட்டடங்கண்) என்பனபோன்றே எழுதவேண்டும். "புதியன புகுதலும், பழையன கழிதலும் வழுவல" என்பதன்றி; "புதியன புகுத்தலும் பழையன கழித்தலும் வழுவல" என இல்லையல்லவா! இத்தகைய புணர்ச்சிச் சொற்களை உபயோகத்திற் காணுதல் பழைய இலக்கியங்களைப் பொருள்கண்டு ரசிக்கவும், பாட்டுக்களைப் பதச்சேதம் செய்து இலகுவில் விளங்கவும் மாணவர்களுக்கு மிக உதவி செய்யும்.

14. ஓரோசை எழுத்துக்கள்

சொற்களில் ர, ற; ல, ள, ழ; ன, ண, ந என்பன போன்ற கிட்டத்தட்ட ஓரே சத்தமுள்ள எழுத்துக்களின் உபயோகமும், பொருட்பேதமும், நன்கு கவனிக்கப்பெற வேண்டும். ஒன்றனிடத்தில் ஒலியொப்புமை நோக்கி இன்னொன்றை எழுதுதல் பொருட் சிதைவுக்கு வழியாக்கும். இத்தகைய எழுத்துக்களின் மாற்றத்தைத் தெளிவுபடுத்தச் சில கூட்டுப் பதங்களையும், அவற்றின் பொருட்பேதங்களையும் காட்டுவோம்.

1. அரம்-அராவும் கருவி
   அறம்-தருமம்
2. அரி-சிங்கம், திருமால்
   அறி-அறிந்துகொள்
3. அரை-பாதி, இடுப்பு
   அறை-வீட்டின் அறை, (கன்னத்தில் அடி.)
4. இர-இரந்துகேள்
   இற-செத்துப்போ

5. கரி-யானை, அடுப்புக்கரி
   கறி- (சாப்பிடும்) காய் கறி.
6. கரை-ஓரம்.
   கறை-குற்றம்.
7. உரை-சொல்.
   உறை-வசி.
8. குரை-ஒலி அல்லது சத்தமிடு.
   குறை-குற்றம் அல்லது குறைவுபடுத்து
9. குரங்கு-குரங்கு எனும் மிருகம்.
   குறங்கு-தொடை.
10. மரை-மரை எனும் மிருகம்.
    மறை-வேதம், ஒளிந்து கொள்.
11. பரவை-கடல்.
    பறவை-பட்சி.
12. பரி-குதிரை.
    பறி-பறித்தெடு.
13. விரல்-கை விரல்.
    விறல்-வலிமை.
14. அலை-கடலலை
    அளை-சேறு, புற்று.
    அழை-கூப்பிடு.
15. உலை-கொல்லுலை.
    உளை-பிடரி மயிர்.
    உழை-பக்கம், சம்பாதி.
16. அலகு-(பறவை) மூக்கு
    அளகு-சேவல்.
    அழகு-எழில்.
17. கலை-கல்வி ஞானம்.
    களை-களைப் பூண்டு.
    கழை-மூங்கில், நீக்கு
18. வாளை-வாளை மீன்.
    வாழை-வாழை மரம்.
    வாலை-இளமை, இலக்குமி.
19. முந்நூறு-மூன்று நூறு.
    முன்னூறு-முதல் நூறு
20. அந்நாய்-அந்த நாய்
    அன்னாய்-தாயே!

21. மண்-பூமி.
மன்-அரசன்.

22. கனி-பழம்.
கணி-சோதிடன்.

இன்னும் பொரு, பொறு; கருப்பு, கறுப்பு; பொரி, பொறி; கூரிய, கூறிய; கூரை, கூறை; மரம், மறம்; பாரை, பாறை; பிரை, பிறை; பெரு, பெறு; சாரு, சாறு: பேரு, பேறு என்பனவும்; இலை, இளை, இழை; விலை, விளை, விழை; வலை, வளை, வழை; கலகம், கழகம்; காணம், கானம்; மனம், மணம்; பனி, பணி என்பனவும் போன்ற பதக் கூட்டங்களின் பேதக் கருத்துகளை ஆசிரியரிடம் கேட்டும், வழக்கிலிருந்தும் அறிந்து வைத்திருத்தல் வேண்டும். இத்தகைய பதங்களை வைத்துத் தனித்தனி வசனங்கள் ஆக்குதலால் இவற்றை மதிக்கும் ஆற்றலை விருத்தி செய்யலாம். அப்போ இவ்வெழுத்துக்களிலொன்று எழுதும் இடத்தில் இன்னொன்றுவந்து பிழையுறுத்தாது மாணவர் தப்பிக்கொள்ளுவர்.

பொதுவாக மாணவர்கள் எழுதுதலில் விடும் பிழைகளிற் சிலவற்றை இங்குக் காட்டினோம்.

15. திருப்பி வாசித்தல்

மறந்தேனும் பிழை விடுதல் மனித இயற்கையேயாதலால் அதற்காகக் கவலைப்படுவதைவிட, அடிக்கடி ஆட்கொள்ளும் பிழைகளைத் திருத்த முயலுதல் நற்பயனளிக்கும். அவ்வாறு கவலையீனமாகவோ, தெரியாமலோ விட்ட பிழைகளையெல்லாம் மாணவர் தாமே ஒருமுறையாவது படித்துப்பார்த்துத் திருத்தவேண்டும். ஒருவர் தான் எழுதும் எதையும் திருப்பி வாசித்துப் பார்க்காமல் இன்னொருவர் கைக்குக் கொடுக்கக்கூடாது. ஆகவே எழுதுகின்ற கட்டுரைகளையும் அப்படித் தாம் படித்துப் பார்த்தல் பல நன்மைகளைத் தருவதொன்று. அப்போது வரும்

பிழைகளைத் திருத்தம் செய்துகொண்டால் மேற்காட்டிய வாறான பிழைகள் எவரையும் இலகுவிற் சேராது என்று கூறலாம். பெரும்பாலான மாணவர்கள் தாம் எழுதுவதைத் திருப்பி வாசிக்கவேண்டும் எனும் கவலையில்லாதவர்களாயிருக்கிறார்கள். இரண்டொரு முறைகளில், திருப்பி வாசித்தலின் நற்பயனைக் கண்டுகொண்டார்களானால், நிச்சயம் திரும்ப வாசிக்கத் தவறமாட்டார்கள். பகிரங்கப் பரீட்சைகளிலும் தாம் எழுதிய விடையாவும் திருப்பிப் படித்த பின்னரே பரிசோதகரிடம் கொடுக்கவேண்டும். தரப்பட்ட நேரத்தில் ஒரு பகுதியை ஏற்கனவே இதற்காக ஒதுக்கிவைத்து அப்படியே செய்வார்களானால் தாம் குறைந்த வினாக்களுக்கே விடை எழுதினாலும் எழுதியவற்றிலாவது நிறைந்த புள்ளிபெறப் பாத்திரராவர்.

இனி இன்றைய தமிழ் மொழியில் ஏற்படுகின்ற முக்கியமான கலப்பு ஒன்றைப்பற்றிக் கவனிப்போம்.

16. பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதல்

பிற பாஷைச் சொற்கள் பல தமிழில் இப்போது மிகுதியும் கலந்து வழங்கப்படுகின்றன. தமிழ் நாடு விரிந்து பரந்து வேறு படையெடுப்புகளால் சேராதிருந்த காலம்போய், பல பாஷைச் சூழல்களால் நெருக்கப்பட்டு, அந்நியராட்சியால் அடிமைப்பட்டு இருக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் தமிழ் மற்றைச் சொற்களும் தன்னுட் கலக்க இடம்கொடாமலிருக்க முடியவில்லை. நன்னூலாசிரியர் காலத்தில் தமிழ் நாட்டில் பன்னிரண்டு கொடுந்தமிழ் நாட்டுச் சொற்கள் கொஞ்சம் கலந்தன என வரையறை கூறினார். இன்றைய இந்தியத் தமிழில் தெலுங்கு, கன்னடம், மலையாளம், பார்ஸி, அரபி, உருது முதலிய பல சூழற் பாஷைச்

சொற்கள் வலிந்து புகுந்துகொண்டன. கடல் சூழ்ந்து இந்தியாவினின்றும் தனித்து இருக்கிற காரணத்தினால் நம்மிலங்கைத் தமிழ் இத்தகைய கோரப் படையெடுப்புகளுக்கு இலகுவில் ஆளாகாது தப்பியது நமது பாக்கியமே. இவற்றைவிட ஆங்கில மொழிக்கலப்பு ஒருபால் எங்கும் சேர்ந்திருக்கிறது. அதிலும் இந்தியத் தமிழர் அநேக சொற்களைத் தம் உபயோகத்துக் கெடுத்துக்கொள்ள ஏற்பட்டது. ஏரோப்ளேன் (Aeroplane), கிராமபோன் (Gramaphone), மீட்டிங் (Meeting), டைம் (Time), ஹாட் (Hat), ஜட்ஜ் (Judge) ஸ்டாம்பு (Stamp) போன்ற சொற்களை அப்படியே பொது மக்களிற் பலர் அங்கு உபயோகிக்க, இலங்கையில் இவை பெரும்பாலும் ஆகாயக் கப்பல், பாட்டுப் பெட்டி, கூட்டம், நேரம், தொப்பி, நீதிபதி, தபால் முத்திரை எனும் பதங்களால் குறிப்பிடப்படுகின்றன. பிறமொழிச் சொற்களை நாம் சேர்த்துக்கொள்ளுவதால் நமது மொழி விரிந்து இன்னும் வளர்ந்து செழிப்புறும். ஆயினும் நம்மிடம் இல்லாதவற்றைச் சேர்த்துக்கொள்வதன்றி அனாவசியமாகச் சொல்லிரவல் வாங்குதல் நல்லதல்ல. மேனாட்டு மொழிகளிலேயே இன்றைய நாகரிக கலையாகிய விஞ்ஞான நூல்களெல்லாம் இருக்கின்றன. அவற்றுக்கான சொற்களை நாம் அப்படியே உபயோகிப்பது இலகுவாக விளங்கிக்கொள்ள உதவியாகும். ஆதலால் அப்படியானவைகளையும், இன்று வழக்கத்தில் பிரிக்கமுடியாது புகுந்துகொண்ட சொற்களையும் நாம் எடுத்தாளவேண்டியிருக்கிறது. இவற்றுக்காகக் கஷ்டப்பட்டு மற்றையோர்க்கு விளங்காத கடும்பத உபயோகத்தைக் கொள்வது பயன்படாது. ரேடியோ (Radio), ஸயன்ஸ் (Science), மைக் (Mike), மோட்டோர் (Motor), கார் (Car), பஸ் (Bus), பெட்ரோல் (Petrol) பைசிக்கிள் (Bicycle), மார்க்கட் (Market), போஸ்ற்

காட் (Post Card), ஸ்ரேஷன் (Station), போஸ்டாபீஸ் (Post office), போட்டோ (Photo), மைல் (Mile), எக்கர் (Acre), ட்ரும் (Tram), வயலின் (Violin), கோர்ட் (Court), பியன் (Peon), கோட் (Coat), ஷர்ட் (Shirt), சோடா (Soda), டோக்கீஸ் (Talkies), யார் (Yard) போன்ற சொற்களெல்லாம் தமிழருக்கு நன்கு பழக்கமானவையாய்க் கலந்து போனவைகள். 'துவிசக்கர வண்டி' எனும் வடமொழிபெயர்ப்பிலும், பார்க்க 'பைசிக்கிள்' என்பது சாதாரணமான சொல்லாயிருக்கிறபோது பின்னதை ஆள்வதில் அவ்வளவு தப்பில்லை. ஆகையால் இத்தகைய சொற்களைத் தடுக்கமுடியாதவாறு நாம் கட்டுரைகளில் அப்படியே எடுத்தாளும்படி ஏற்படலாம். அப்படி வரும்போது இவற்றை 'பஸ்' என்பதுபோல் ஒரு கோட்பினுள் காட்டுதல் இனம் கண்டு கருத்தறிய உதவியாகும்.

17. கட்டுரை தெரிதல்

சொல்லாராய்ச்சியும் பொருளாராய்ச்சியும்போல் கட்டுரை தெரிவுசெய்வதும் அவசியம் அவதானிக்கப் பெறவேண்டியது. பரீட்சைகளில், பல வகையிலும் எழுதக்கூடிய தலைப்புகள் தரப்படுகின்றன. மாணவர் தமக்குத் திறமையுள்ள பொருள்பற்றி எழுதுதற்கு இது உதவி செய்கிறதுபோல். எழுதுபவர்களினுடைய திறமை சார்ந்திருக்கும் பகுதியை மட்டிடப் பரிசோதகர்களுக்கும் உதவியாகின்றது. உலக விவகாரங்கள், அரசியல் விஷயங்கள் போன்றவை பத்திரிகை வாசிப்பதில் கவனமுடையவர்க்கு இலேசானவையாகும். இலக்கிய ரசிகர் இலக்கியம் சம்பந்தமானவற்றை எழுதுவர். கற்பனைசக்தி மிகுந்தோர் கற்பனைக் கதை, வருணனைக் கட்டுரை என்பனவற்றை எழுதப் புகுவர். இவைகளில் எல்லார்க்கும் பொது

வாளாது கற்பனைசக்தி யொன்று. இதை மாணவர் விருத்திசெய்து வைத்திருப்பது முன்னையத்தமின்றியே நல்ல கட்டுரைகளை எழுத உதவிசெய்யும். வாசினையறிவும், கேள்வியறிவும்கொண்டு எழுதுவதுபோல, இவையொன்றுமின்றி எழுத உதவிதரும் கற்பனை சக்தியை ஆளும் வகையையும், வளர்க்கும் முறையையும் மாணவர் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். ஆதலால் இதன் அவசியம், பயன், இதை விருத்திசெய்யும் வழிவகைகள் என்பனவற்றைப்பற்றித் தனியாக அடுத்த அதிகாரத்தில் விளக்குவோம்.

2. வருணனைப்பகுதிகளும் தழுவி எழுதுதலும்.

கற்பனைக் கட்டுரைகள் எழுதுவோரது சொந்தத் தன்மை [Originality]யைக் காட்டுவன. இயற்கையிலே எல்லார்க்கும் பொதுவான கற்பனைசக்தியானது சூழல், ரசித்து வாசித்தல் முதலியவற்றால் வெவ்வேறான வகையில் வளர்வுறுகிறது. தொடர்ந்து எழுதுகின்ற பயிற்சியும் இதை வளர்க்கிறது. கற்பனைப் பகுதிகளை மாணவர் எழுதப்பழகுவதற்கு கற்பித்து எழுதப்பட்ட வருணனைகளை வாசித்தலும், அவற்றை மாதிரியாகக்கொண்டு எழுதுதலும் உதவிசெய்யும். பெரியார்களுடைய நடை, வருணனை முதலியவற்றை நாம் தழுவி எழுதப்பழகுதலில் தப்பில்லை எனலாம். ஆரம்பத்தில் இவ்வாறு தழுவி எழுதுதல் [Imitating] மிகுந்த நன்மைதருமென ஆங்கில எழுத்தாளர் பலர் கருதுகின்றனர். நெடுகிலும் மற்றையோரைப் பிரதிசெய்து எழுதுவது மிகப் பொருத்தமில்லாததே. ஆனால் தொடக்கத்தில் நாம் வருணிக்கும் ஆற்றல், கற்பிக்கும் சக்தி இவற்றைத் தூண்டித் துரிதப்படுத்துவதற்கு இப்படிப் பிரதிசெய்தலும், தழுவி எழுதுதலும் போன்றவை மிக உதவிசெய்யும். தங்கள் கற்பனையை மாணவர் விரித்துக்கொண்டபின் தழுவி எழுதுதலிலிருந்து மெல்லமெல்ல நீங்கிச் சொந்தத்துக்கு

வரவேண்டும். நல்ல எழுத்தாளர்களுடைய வருண
னைப்பகுதிகளையும், கட்டுரை கதை என்பனவற்றை
யும் படிக்கும்போது அவ்வாசிரியருடைய சிந்தனை
வேலை செய்துள்ள திறமையை மாணவர் அவதா
னித்துக்கொள்வார்கள். படிப்படியாக இலகுவும், கடி
னமுமான பகுதிகளைத் தெரிவு செய்துகொண்டு அவற்
றைப்போன்ற வேறொன்றையிட்டு மாணவர் எழுத
வேண்டும். தெரிவுசெய்த பகுதியிலுள்ள தொடர்
களையே ஆரம்பகாலத்தில் பெரும்பாலும் எடுத்தாள
லாம். பின்னர் சொற்களையும், அப்படியே கருத்துக்
களையும் ஆண்டு தனது சொந்தத் தன்மையை
வளர்த்துக் கொள்வதற்கேற்ற அளவில் பெற்றுக்
கொண்டு வெளியேறல் வழி. இப்படி மாதிரியாக
எழுதக்கூடிய வருணனைப் பகுதிகள் சிலவற்றை இங்
குத் தருகின்றேன். இவை போன்றவற்றைத் தம்
ஆசிரியர் உதவிகொண்டு மாணவர் தம் தரத்துக்கேற்
பத் தெரிவுசெய்து தழுவி எழுதிப் பழகிக்கொள்ள
லாம் :—

1. ஆலமரமொன்று என்னிடம் கூறியவை

தூரமிருந்து களைத்துவரும் பிராணிகளுக்கு
இளைபபாறும் பாடிவீடாக வழியருகில் நான் வளர்ந்
திருக்கிறேன். காலந்தோறும் இளந்தளிர்களும், பசிய
இலைகளும், பொன்னிறமான பழுப்பிலைகளும் ஆகிய
புதுப்புது உடைகளை மாற்றிமாற்றி உடுத்து மகிழ்கின்
றேன். மிக நுண்ணிய ஒரு விதையுள் எனது இந்
தப்பெரிய தோற்றம் எவ்வாறு அடங்கியிருந்ததென்
பது எனக்கும் ஆச்சரியந்தான். படர்ந்து பருத்து
விளங்குகின்ற எனது கிளைகள், பலவகைப் பிராணி
களுக்கு உறைவிடமளிக்கின்றன. நான் பழுத்திருக்
கும் காலம் பார்த்து காகம், குயில், அணில், குரங்கு

முதலிய எத்தனையோ விருந்தினர்கள் வருகிறார்கள்.
அவர்கள் யாவரும் என் வீட்டிற்கு அழையா விருந்
தினரேயாயினும் நான் ஒப்புடன் முகமலர்ந்து உப
சரித்து உணவு வழங்குகின்றேன். உருண்டையும்
அழகுமான எனது சிவந்த பழங்களுள், சிறிய புழுக்
கள் எப்படியோ புகுந்துகொண்டு உள்ளொன்று
புறம்பொன்றானவர்களுக்கு, "ஆலம் பழம் போல"
என்று மற்றவர்கள் குத்திக்காட்டும் வசைமொழிக்கு
என்னை ஆளாக்கிவிட்டன. விழுதுகளாக நான் வைத்
துக்கொண்டிருக்கும் ஆகாய வேர்கள் உங்களைப்
போன்ற துடுக்கு நிறைந்த மாணவர்களுக்கு ஆடு
கயிறுகளாகின்றன. இது எனக்கு நோவைக் கொடுப்
பதேயாயினும், நீங்கள் உந்தி ஊஞ்சலாடும்போது
உறும் மகிழ்ச்சியைக்கண்டு நோவை மறந்து ஆனந்
தப்படுகின்றேன். எனது சந்ததியார் மற்றவர்களுக்கு
நிழல் கொடுத்து உதவுவதில் பரம்பரையாகவே புகழ்
பெற்றவர்கள். அதற்குக் கைம்மாறாக எவரிடமும்
எதுவும் வேண்டாத எங்களின் லட்சியத்தை நீங்
களும் அவசியம் பின்பற்றி வாழ முயலுதல் நல்ல
தில்லையா ?

இதைத் தழுவி, 'உன் வீட்டு மாமரம் கூறியவை',
'நாற்சந்தியில் நிற்கும் பழைய அரசமரமொன்று கூறி
யவை' போன்ற தலைப்புகளில் மாணவர் கற்பித்
தெழுத முயற்சிக்கலாம்.

2. நீலவானம்

வானம் நீலநிறமானது. எல்லையற்ற அகலமும்
பரப்பும் உடையது. வானவெளியானது சூரியனிட
மிருந்து கவர்ந்த நீல நிறத்தினாலே நீல வானமாகிப்

பூவுலகத்தினருக்கு ஒரு அழியாத கூரைபோன்று விளங்குகின்றது. நமது தூண்டா விளக்கமாகிய கதிரவனும், இரவினிலே பால் பொழியும் மதியவனும் தன்னகத்தே சஞ்சாரம் செய்வதற்கு இடந்தந்து நமக்குப் பேருதவி செய்த இந்நீல வானத்துக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு யாது? நிறைந்த இராக் காலத்தே வைரக் கற்கள்போன்று அங்கங்கே இடைவிடாது பிரகாசிக்கின்ற நட்சத்திரக் கூட்டங்கள் வானத்தின் நீலநிறத்தை இன்னும் மிகுதிப்படுத்துவனவாகும். காலையிற் தோன்றும் கதிரவனின் பொற்கிரணங்களும், மாலையில் வரும் அவனது செங்கிரணங்களும் நீலவானம் என்கின்ற பட்டுச் சேலைக்கு வைத்துப்பிடித்த சரிகைக் கரை போன்று அழகு தருவன. சூரியனது கதிரொளியால் வேறு வேறு நிறங்கொண்டு பலவேறு தோற்றங்களில் காட்சியளிக்கும் மேகக் கூட்டங்கள் நீலவானத்தினுடைய விளையாட்டுப் பொம்மைகள். நமக்கு இனிய தென்றலையும், குளிர்ந்த மழையையும் தந்து நம்மை வாழவைக்கும் இந்நீலவானம் நமக்குச் செய்யும் பேருதவிகள் அளப்பில்லனவன்றோ!

இப்பகுதியைத் தழுவி 'நீலக் கடல்', 'பசிய மைதானம்' எனும் தலைப்புகளில் வருணனைப் பகுதிகள் எழுதுக. இதுபோன்ற பகுதிகள் 'அந்திவானம்', 'மழைக் காலம்' என்பவற்றில் எழுதவும் உதவி தரும்.

3. விளைந்த வயற்காட்சி

மலையிலிருந்து ஓடிவரும், ஓரளவு அகலமும் ஆழமுமான ஒரு ஆறு. அதன் இருமருங்கிலும் காணப்படும் பரந்த செழித்த வயல். வயல் முழுவதும் கதிர்

பழுத்திருந்த காலம். எங்கும் பசிய பொன்னிறம். சுமைதாங்காமல் கதிர்கள் தலைசாய்ந்து நிலத்தைத் தொட்டுநின்ற காட்சி பக்திமான்கள் ஒருவரையொருவர் தலை தாழ்ந்து வணங்கி நிற்பது போலிருந்தது. வயல் வெளியிலே இடையிடையே காணப்பட்ட உயர்ந்த வரம்புகளில் படர்ந்திருந்த பசிய பொன்னாங்காணி, பால் அறுகு முதலியவற்றின் மிகுந்த பசுமை நிறம் கதிர்ப் பழுப்பின் பொன்னிறத்தை இன்னும் மிகுதிப்படுத்துவதாய் இருந்தது. வயலிலிருந்து வெளியேற்றப்பட்ட நீரோடும் சிறிய வாய்க்கால்களில் துள்ளிக் குதித்துத் திரியும் மீன்களைப் பிடிப்பதற்காக நாரைகள் ஒற்றைக்காலில் தவம் செய்துகொண்டிருந்த காட்சி பார்ப்போர் மனதில் அமைதியையும் சாந்தியையும் ஊட்டுவதொன்று. நெடுந் தொலைவில் உள்ள காடுகளிலிருந்து பாட்டம் பாட்டமாகப் பறந்துவந்து நென்மணிகளைத் திருடுகின்ற குருவியினங்களைக் கல்லெறிந்து ஓட்டும் சிறுவர்களதும் சிறுமிகளதும் இன்னிசைக் கீதம், நீர்க்கால்களிலிருந்து எழுகின்ற 'குளு, குளு' சத்தத்தோடு சேர்ந்து தெவிட்டாத இன்பந்தருவதாய் இருந்தது. வயலில் அங்கங்கே உயர்ந்த பரண்கள் காணப்பட்டன. வயலைச் சுற்றிப் பார்வையிட்ட பின்னர், அப்பரண்களை நோக்கி விரைந்து நடந்துசெல்லும் மள்ளர்களது அழகிய கம்பீரமான தலைப்பாகைகளும், தோள்களில் காணப்படும் மண்வெட்டிகளும் "உழவே சிறந்த தொழில்" என்னும் உயர்ந்த திடமான கருத்தை நமக்கு ஞாபகமூட்டுவன.

'பசும் பயிர் நிறைந்த வயலொன்றின் காட்சி', 'காய்கறித் தோட்டக் காட்சி' என்பவற்றை வருணித்தெழுத இப்பகுதி தழுவக்கூடியதாகும்.

4. வகுப்பறை கூறியவை

நெருப்பு வெயில் கொளுத்தும் மணல் வெளியில் அமைந்து நான் குளிர் நிழலை உங்கட்குத் தருகின்றேன். கடலிற் பிறந்து சோலையினூடே தவழ்ந்து வரும் இனிய கொண்டற் காற்று உங்கள்மீதுபட்டு உற்சாகமூட்டவும் வசதியான பலகணிகளோடு நான் அமைந்திருக்கிறேனே! என்னயலில் கிழக்குப் பக்கத்தே நிற்கும் முதிய வேப்புமரம் எனது நெருங்கிய நண்பன். பாடசாலை விடுதலை நாட்களிலும், மற்றும் நான் தனித்திருக்கும் வேளைகளிலும் நாங்களிருவரும் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருப்போம். வேறு வேறு பாடங்களைக் கற்பிப்பதற்காக நேரந்தோறும் மாறிவருகின்ற ஆசிரியர்களெல்லாரும் எனக்கு அறிவு புகட்டி, உங்கள் பலத்த சத்தத்தினின்றும் ஆறுதல் தரும் எனது அன்பின் உறவினர்கள். நீங்கள் அனைவரும் எனது விளையாட்டுத் தோழர்களாயினும், பெரும்பாலும் நான் உங்கள் வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமாயிருப்பதால் உங்கட்குத் தாயும் தந்தையும் ஆவேன். மிக ருசிகரமான பாடங்கள் நடந்து கொண்டிருக்கும் போதும், ஊக்கம் குன்றித் தூங்கி வழிந்துகொண்டிருக்கும் உங்களிற் சிலரைப் பார்த்து நான் பரிதாபப்படுவதுண்டு........................

இதைத் தொடர்ந்து பத்து வசனங்கள் எழுதுக. பின்னர் இப்படியான கருத்துக்களமைத்து 'உனது படிப்பறை', 'உனது வீடு', 'உனது சட்டை', 'உனது குடை', 'பாடசாலை மணி', 'உன் வீட்டுத் தோட்டத்திலுள்ள ரோஜாச் செடி', 'நீ வளர்க்கும் கிளி' என்பவை கூறியவற்றைக் கற்பித்தெழுதுக.

5. ஒரு பட்டமரம்

பரந்த வெளியொன்றின் மத்தியில் தனித்து நிற்கும் ஒரு உலந்த மரம் அது. செழித்து அடர்ந்த பசிய இலைகட்கும், செந்நிறமான இளந்தளிர்களுக்கும், கொத்துக் கொத்தான பூந்துணர்களுக்கும், முறையே பிஞ்சு, புளிக்காய், செந்நிம்பழம் ஆகிய வற்றுக்கும் காலந்தோறும் இடந்தந்து மகிழ்ந்து நின்ற அதன் கிளைகள்; மொட்டையாய், மணமகனையிழந்து தலைவிரிகோலமான வநுங்கைபோல் உலர்ந்த மிலாறுகளைக்கொண்டு அலந்து நிற்கின்றன. அதனுடைய பொலிவிழந்த தோற்றம் உலகின் நிலையாமையை நன்கு எடுத்துக்காட்டிற்று. கூடுகட்டி வாழ்ந்த பறவைகளும், கிளைமீதமர்ந்து கூடிக்குலாவிப் பறந்த பறவைகளும், பழுநிலைப் நாடிப் பல திசைகளிலுமிருந்து விருந்தினராய் வந்துசென்ற பறவைகளும், குதித்து மகிழ்ந்த குரங்கு, அணில் முதலிய மற்றும் பிராணிகளும் கணக்கிறந்தவையாயினும் இன்று அவை செல்வம் அற்றுழிவிட்டு நீங்கும் சீரில்லா நண்பினர் ஆயின. நறுந்தாது குடைந்து நாட்போதலர்த்திய நளினங்கள் "நறுந்தாதுண்டு நயனில் காலை வறும் பூந்துறக்கும் வண்டுகளே"யாயின. கடும் வெயிலால் சாறு வற்றிப்போய் வெடித்த பட்டைகளின் இடைவெளிகள் சிறு பூச்சிகளுக்கும், தேள் பல்லி முதலான அற்ப பிராணிகட்கும் இடந்தந்து நின்றன. வசந்த காலம் தொடங்கியதும் அதை நோக்கிப் பறந்துவந்து 'குக்கூ......' என இன் குரற் தொடுத்துப் பாடிய குயில்களுக்குப் பதிலாக, நிறைந்த, பயங்கரமான இராக்காலத்தே அபசகுனமான குரல் கொடுக்கும் ஆந்தையும் கோட்டானும் வந்திருந்து அலறுகின்றன. வெயிற்போதில் அதனிடத்தே நிழல் தேடிச் செல்வார் இன்று இலராயினர். இவ்வாறு

நிலையாமைக்கும், தனிமைக்கும், பொறுமைக்கும் உருவாய் தான்செய்த நன்றியை மறந்தாரிடத்தும் தீங்கு பாராட்டாது நிற்கும் அந்தப் பட்ட மாமரம் நமக்குப் பலவகையான பாடங்களைப் போதிக்கவில்லையா!...

இதைத் தழுவி, 'நன்கு தழைத்துச் செழித்த பசிய மரமொன்றை' வருணித்தெழுதுக. இது போன்ற கருத்துக்களமைத்து 'ஒரு கொடையாளி', 'பழங் கோயிலொன்று', 'நீர் நிறைந்த குளம்', 'நீர் வற்றிய குளம்' எனும் தலைப்புகளில் எழுதப் பயில்வது மாணவர்களுக்கு நல்ல பயிற்சியாகும்.

6. பூரணை இரவில்

களங்கமற்றிருந்த நீலவானத்தின் உச்சியை நோக்கிப் பூரண சந்திரன் ஊர்ந்து வந்துகொண்டிருந்தான். செடி கொடி முதலிய படைப்புகள் யாவும் அவனது வெள்ளி நிலவால் குளிப்பாட்டப்பெற்று ஒரு தனிச் சோபையுடன் விளங்கின., சுமார் பத்து மணி இருக்கும். ஊர் மனைதோறும் நிலாச் சோறு செய்யும் சிறுமிகளதும்; கிட்டி, கோலி விளையாடும் சிறுவர்களதும் கலகலப்பான ஒலி அந்த இரவை இன்னும் இனிமைப்படுத்தியது. எங்கள் பாடசாலையில் ஒருபுறத்தே இருக்கும் பரந்த வயலிலிருந்து விட்டுவிட்டொலிக்கும் நீர்த்தாரா முதலிய பறவைகளின் சிற்றொலிகளும், மறுபுறத்தே இருக்கும் சிறு காட்டில் எங்கேயோ நெடுந் தொலைவிலிருந்து கேட்கப்படும் நரிகளின் ஊளைச்சத்தமும் மாறி மாறி ஒலித்து இரவின் அமைதியை இன்னும் எடுத்துக்காட்டின. பளபளவென்று சொலிக்கின்ற பாற் கிரணக்கற்றை தடவும்

பச்சிலைகள் இனிய தென்றலினால் கடலலைபோல் அசைந்துகொண்டு நின்றன. சந்திரனுடைய மேள தாளங்களாக ஒலிக்கும் கடலிரைச்சல் கல்லாமாந்தரது கழறலே போன்று ஓயாது கேட்கப்பட்டது. தமது இரையான எலிக் குஞ்சுகட்கு அபயம் கொடுத்துத் தம்மை பட்டினிப்படுத்திய கொடுமைக்காக ஆந்தைகள் படுமரக் கொம்பர்களிலிருந்து இடையிடையே மதியவனைத் தூஷித்தன. இவ்வலறல் ஒலி அபசகுனமென்று ஊரார் காதுகளிற்படாது தடுப்பன போலப் பாட்டுக் கச்சேரி பண்ணிய நாய்களின் சத்தம், வழக்கத்துக்கு மாறாக பூரணை நிலவின்பத்தை மிகுதிப்படுத்தியது. வயற்புறத்தே ஓடும் சிற்றாறு வெள்ளி உருக்கி வார்த்ததுபோலப் பிரகாசித்துக் கொண்டு 'இழும்' என்னோசையோடு விரைந்து நடந்துகொண்டிருந்தது ....

இதைத் தொடர்ந்து பத்து வசனங்கள் எழுதி முடிக்குக. அப்பால் இப்பகுதியைத் தழுவி 'நிறைந்த இராக்கால மொன்றில்'—எனும் தலைப்பில் ஒரு பந்தி வருணனை எழுத முயலுக. "இளவேனிற் காலம்", 'சூரியோதய நேரம்' எனும் பொருள்களில் மேற்காட்டிய பந்தியினைத் தழுவி எழுதப் பழகுதல் நல்ல கற்பனைப் பயிற்சியாகும்.

7. ஒரு மாம்பழக் குலை

கெட்டித்து வரண்ட அங்கிலத்திலிருந்த பொற்பொடிகளையெல்லாம் மரமானது உறிஞ்சித் திரட்டிக் காட்டுவதுபோலக் கிளையொன்றில் தொங்கிக்கொண்டிருந்தது ஒரு மாம்பழக் குலை. ஒன்று செம்பழம், இன்னொன்று கரும்பழம், மற்றது பசும்பழமாக மூன்று

பழங்கள் சேர்ந்தது அக்குலை. பாரந்தாங்காது தாழ்ந்து நின்ற கிளையில், ஊஞ்சலாடிக்கொண்டிருந்த அக்குலை நீர்விட்டு மரத்தைப் பாதுகாத்த தோட்டக்காரனுக்கு நன்றியறிதலுள்ள மரத்தினால் அளிக்கப்படவிருக்கும் கையுறை போன்று மிளிர்ந்தது. பொன்னிறத்தினால் கவரப்பெற்றுக் கொத்தித் தின்னவரும் காக்கைகளுக்கெட்டாதபடி காற்றானது குலையை அங்குமிங்கும் அலைத்துக்கொண்டிருந்தது. அடி பெருத்து, நுனி ஒடுங்கிக் கூர்ந்து வளைந்து நின்ற பழங்கள் மூன்றும் ஒன்றையொன்று கட்டித் தழுவி நின்ற அழகு இணைபிரியாச் சகோதரத்துவத்தை எடுத்துக் காட்டிற்று. அமிர்தம்போன்று சுவை நிறைந்து, சிவப்பூர்ந்த தசைப்பாகத்தைத் தோலானது மூடி மறைக்க முயன்றும் 'கமகம' என்ற மணமாகவும், 'கொழு கொழு' என்ற நிறமாகவும் பழத்தின் கபடமற்ற தன்மை பிரகாசித்தது. மாமர வர்க்கத்தை விருத்தி செய்வதற்காக இறைவன் இப்படி விதையை மறைத்துச் சுவையால் மூடிய தந்திரத்தைப் பறவைகளோ, மனிதரோ யார் அறிந்து ரசிக்கிறார்கள்!

இப்பகுதியைக் கொண்டு வேறு பல பழக்குலைகளையும் தனித்தனி வர்ணித்து எழுதுக. கடையில் தொங்கும் போதும், சொந்த மரத்திலோ, கொடி, செடிகளிலோ தொங்கும் போதும் அவை கூறும் கற்பனைகள் மாறியிருக்கலாம். அப்பகுதிகளைக்கொண்டு 'பழங்கள் நிறைந்த மரமொன்று' 'பழக்கடை' என்பவற்றை வர்ணித்துத் தாமாக எழுத முயலவேண்டும்.

8. ஒரு வாய்க்கால்

குளமொன்றிலிருந்து வயற் பரப்பை நோக்கி ஓடும் ஒரு சிறிய வாய்க்கால். அதிக ஆழமில்லாத

மாலை நேரம்

மேற்குத் திசையில் சூரியன் அஸ்தமனமாகிக்கொண்டிருந்த காட்சி அடி மரங்களின் வழியாகத் தெரிந்தது. மேல் வானம் முழுதும் பத்தரைமாற்றுத் தங்க விதானத்தைப்போல் தகதகவென்று பிரகாசித்தது. பார்த்துக்கொண்டிருக்கும்போதே தங்க நிறத்தின் சோபை மங்கிக்கொண்டு வந்தது. அடிவானத்தில் சூரியன் மறைந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் மேல்வானம் முழுதும் ஒரே இரத்தச் சிவப்பாய் மாறிற்று. இந்தக் காட்சி அருள்மொழித் தேவிக்கு ரணகளத்தையும், அங்கே இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவதையும் ஞாபகப்படுத்திற்று...... ....காஞ்சி நகர் அரண்மனையின் உப்பரிகை நிலா மாடத்தில் சக்கரவர்த்தியும், குந்தவிதேவியும் அமர்ந்திருந்தார்கள். கிருஷ்ண பக்கத்து முன்னிரவு வானத்தில் விண் மீன்கள் சுடர்விட்டு ஒளிர்ந்தன. கிழக்கே வெகு தூரத்தில் மாமல்லபுரத்துக் கலங்கரை விளக்கம் நட்சத்திரங்களுடன் போட்டியிட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. காஞ்சி நகரின் பற்பல சிவாலயங்கள், விஷ்ணு ஆலயங்களிலிருந்தும் பேரிகைச் சத்தம், ஆலாட்ச மணியோசை, யாழின் இன்னிசையுடன் கலந்து பாடும் பக்தர்களின் குரலொலி—எல்லாம் கலந்து வந்துகொண்டிருந்தன. அரண்மனைப் பூந்தோட்டத்திலிருந்து செண்பகம், பன்னீர், பாரிஜாதம் ஆகிய மலர்களின் சுகந்தம் குளிர் காற்றுடன் கலந்து இலேசாக வந்துகொண்டிருந்தது.'

அருவிக் கரை

'பள்ளத்துக்கு இடதுபுறத்தில் கொஞ்சத் தூரத்தில் அருவி 'சோ' என்று அலறிக்கொண்டு கீழே

விழுந்தது. அருவி விழுந்த திக்கை எதிர்ப்புறமாகப் பார்த்தால், கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. மூன்று பக்கமும் சுவர் வைத்தாற்போன்ற மலைத் தொடர்கள். நடுவில் விஸ்தாரமான சமவெளி. அந்தச் சமவெளியில் கண்ணுக்கெட்டிய தூரம் மஞ்சள் மலர்களால் மூடப்பட்ட காட்டுக் கொன்னை மரங்கள். எங்கே பார்த்தாலும் பூ! பொன்னிறப்பூ!!'

ரணகளம்

'நதியின் மேற்குக் கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் கொடும் போர் நடந்த ரணகளத்தின் கோரமான காட்சிதான். வீரசொர்க்கம் அடைந்த ஆயிரக்கணக்கான போர் வீரர்களின் உடல்கள் அந்த ரணகளமெங்கும் சிதறிக் கிடந்தன. சில இடங்களில் அவை கும்பல் கும்பலாய்க் கிடந்தன. கால் வேறு கை வேறாகச் சிதைவுண்டு கிடந்த உடல்கள் எத்தனையோ! மனிதர்களைப் போலவே போரில் மடிந்த குதிரைகளும் ஆங்காங்கே காணப்பட்டன. வெகு தூரத்தில் குன்றுகளைப்போல் சில கறுத்த உருவங்கள் கிடந்தன. அவை போர் யானைகளாகத்தான் இருக்கவேண்டும்..................ஆஹா! அந்த வெண்ணாற்றங்கரைப் போர்க்களம் இப்போதுகூட என் மனக் கண்முன்னால் நிற்கின்றது. என்ன யுத்தம்! என்ன யுத்தம்! வெண்ணாறு அன்று இரத்த ஆறாக அல்லவா ஓடிற்று! பூரண சந்திரன் வெண்ணிலவைப் பொழிந்த அந்த இரவிலே, அந்தப் போர்க்களந்தான் எவ்வளவு பயங்கரமாயிருந்தது!'

சிவனடியார்

'தலையில் சடைமுடியும், நெற்றி நிறையத் திருநீறும், அப்போதுதான் நரை தோன்றிய நீண்ட தாடியும், கழுத்தில் உருத்திராட்ச மாலையும், அரையில் காவி வஸ்திரமும், மார்பில் புலித்தோலுமாக அந்தச் சிவனடியார் விளங்கினார். அவர் கையில் கமண்டலம் இருந்தது. அவருடைய முகத்தில் அபூர்வமான தேஜஸ் திகழ்ந்தது. விசாலமான கண்களில் அறிவொளி வீசிற்று. தோற்றமோ வெகு கம்பீரமாயிருந்தது. நடையிலும் ஒரு பெருமிதம் காணப்பட்டது. இந்த மகான் சிவனடியார் தானோ, அல்லது சிவபெருமானே இத்தகைய உருவம் பூண்டு வந்தாரோ என்று திகைக்கும்படியிருந்தது.'

3. மாதிரிக் கட்டுரைகள்

1. நோக்கமும் பயனும்

இதுவரை கட்டுரை எழுதுவது சம்பந்தமாய் முக்கியமான குறிப்புகள் சில காட்டினோம். காலத்தின் வேகத்தையும், நடையின் மலர்ச்சியையும் புதுமையையும், எழுதுதற்கு வேண்டிய அவசிய அவதானக் குறிப்புகளையும், பொதுவாக நம்மை ஆட்கொள்ளும் மலைவுகள் பிழைகளையும் அவற்றுள் கண்டோம். புதுமை எழுத்தாளர்கள் தமிழ் வசன நடைக்கு உயிர் கொடுத்துப், படிப்போரைக் கவரச்செய்து வருவதற்குக் கருவியான கதைகள், கடிதங்கள், சுய சரிதைகள் முதலியவை புனைவதற்காதாரமாயிருக்கும் வருணனைப் பகுதிகளை விரிவாகப் படித்தோம். அவற்றின் மூலம் நமது சிந்தனா சக்தியைக் கிளர்ச்சிசெய்யும் ஆற்றலைப் பெறும் வழி கண்டோம். இனிப் பொதுவான பல கட்டுரைத் தலைப்புகளைப் பயிற்சிக்காக இங்குக் கவனித்து அவை யொவ்வொன்றைம் பற்றிச் சுய ஆற்றல்கொண்டு எழுதத் தூண்டுதல் எமது நோக்கமாகும். அப்படித் தனித் தனி கட்டுரைகள் எழுதுதற்குதவியாகவும் மாதிரியாகவும் இருக்கட்டுமென்று ஒரு சில பொருள்கள்பற்றி மாதிரிக் கட்டுரைகள் தருகின்றேன். தரப்படும் கட்டுரைகளின் தரத்துக்கு எல்லா மாணவரும் எழுத வேண்டும் என்று எதிர்பாக்கப்படவில்லை. மாணவர்களது வகுப்பு நிலைக்கேற்ப விஷயம் ஒவ்வொன்றும் பொருளமைதியும், நடைப் பொருத்தமும் வேறுபட-

லாம். எனவே உயர் வகுப்பு மாணவர்கட்கென்றே பெரும்பாலும் எழுதப்படும் இந்நூலில் உள்ள மாதிரிக் கட்டுரைகள், அந்நிலையில் ஒருதரப்பட்ட நடையில் இருக்கின்றன. கட்டுரைக்காகக் குறிப்புகள் சேகரித்த பின்னரே எழுதத் தொடங்க வேண்டுமென்று முன் கூறினேன். அப்படித் தொகுக்கப்பெற்ற குறிப்புகளை, பின்னால் தந்துள்ள கட்டுரைகளில் புறம்பாகக் காட்டவில்லையாயினும், குறிப்புகள் கொண்டே பந்தி பந்தியாக அவை எழுதப்பெற்றுள்ளன என்பதை நன்கு படித்துப் பார்க்கும்போதறியலாம். இம்மாதிரிக் கட்டுரைகளொவ்வொன்றுக்கும், எடுத்துக்கொள்ளப்பெற்ற குறிப்புகள் என்ன என்ன என்பதை மாணவர் கண்டு, அதே குறிப்புகளைக் கொண்டு தாம் அதே பொருளில் கட்டுரை எழுதுதலும், அப்படி எழுதியவற்றையும், இவற்றையும் ஒத்துப் பார்த்தலும் ஒரு நற்பயன் தரும் பயிற்சியாகும். மாதிரிக் கட்டுரைகளின் முடிவில் தனிப் பயிற்சிக்காகத் தரும் தலைப்புகளெல்லாம் இக்காலத்துக்கேற்ற புதியவை (Current Subjects.) கஷ்டமாகத் தோன்றுபவற்றுக்குத் தம்மாசிரியர் உதவிகொண்டு, குறிப்புகள் பெற்று, கொடுக்கப்படும் நேரத்துக்கோ, அளவுக்கோ உட்பட எழுதிப் பழக வேண்டுமென்று மாணவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

2. பரீட்சைகளில் வினாவுக்கேற்ப விடை தரல்

கட்டுரைப் பொருளில் நன்கு வல்லுநராயினும், வினாப்பத்திரத்துக்கேற்ப விடைதரத் தவறும் காரணத்தால் பலர் பரீட்சைகளில் தோச்சிபெற முடியாது மிகவும் கஷ்டமுறுகின்றனர். நமக்கு மிக மிகப் பிடித்தமானதும், நன்கு தெரிந்ததுமான கட்டுரைப் பொருளைத் தந்து எழுதும்படி நம்மைக் கேட்டால், அப்போ

நாம் அடையும் மகிழ்ச்சி அளவில்லாததே. ஆனால் அம்மகிழ்ச்சியில் மற்றயவற்றை நாம் மறவாது பார்த்துக்கொள்ளவேண்டும். வினாப் பத்திரத்தில் உள்ள வினாக்களின் தொகையும், ஒவ்வொன்றுக்கும் செலவழிக்கக்கூடிய நேரமும் தெரிந்துகொண்டே விடை எழுத முற்படல் நன்று. பெரும்பாலான பரீட்சைகளில் கட்டுரைக்கு நேரம் அல்லது அளவுதரப் பெற்றிருக்கும். 'பின்வரும் விஷயங்களில் ஒன்றைப்பற்றி 40 நிமிஷங்கட்கு மேற் செலவிடாது ஒரு கட்டுரை வரைக' என்பது போலவோ 'ஒரு பொருளை விளக்கி 500 வார்த்தைகளுள் ஒரு வியாசம் எழுதுக' என்பது போலவோ வினாக்கள் இருக்கலாம். அப்படியான கேள்விக்கு விடையாக நாம் 'ஓயாமாரி'த்தனமாக எழுதிவைத்தல் தவறு, நமக்கு நன்கு தெரிந்தவற்றைத் திரட்டி, வேண்டிய முக்கியமானவற்றை மட்டும் ஏற்ற ரீதியில், அளவுக்கும் நேரத்துக்கும் உட்படுத்தி எழுதவேண்டும். இப்படிப் பரீட்சைகளில் பொருத்தமான விடை எழுதுவதெல்லாம் கட்டுரை சம்பந்தப்பட்ட வரையில், மாணவரது தனிப்பயிற்சி வேலைகளையே பொருத்திருக்கின்றது. அதற்காகவே தனி அதிகாரத்தில் இதைக்கூறி, பயிற்சிகளையும் முடிவில் சேர்த்துள்ளேன். இங்குதரும் விஷயங்களுடன், இன்னும் புதுப்புது விஷயங்களையும் தேடிக்கண்டு மாணவர்கள் எழுதிப் பழகித் தமது பேனா முனையை வலிமைப் படுத்திக்கொள்ள வேண்டும்.

இனிப் 'பெரியார் வரலாறு' எழுதுதல் பற்றியும் கடிதம் எழுதுதல்பற்றியும் சில குறிப்புகள் கூறிப்பின் மாதிரிக் கட்டுரைகளைத் தருகின்றேன். பெரியோர்களைப்பற்றி எழுதுவதில், அன்னார் சீவியத்தை மட்டுமன்றி, அவர் பெரியார் ஆனதற்குக் காரணமாக அவர் செய்த வேலைகளையும் முக்கியமாய்க் காட்டு

தல் அவசியமாகும்.

3. பெரியோர் வரலாறு

'நீர் விரும்புகிற ஒரு தமிழ்ப் புலவர்', நீர் மிக விரும்புகின்ற ஒரு பெரியார்' இப்படியாகவோ, அல்லது கவி தாகூர், மகாத்மா காந்தி, விபுலானந்த சுவாமிகள், ஆறுமுக நாவலர், சுப்பிரமணிய பாரதியார் என்பவைபோலப் பெயர்களைக் கொடுத்தோ எழுதும்படி கேட்டால் மேற்காட்டிய குறிப்பே அதிகம் கருதப்படுவதை மாணவர் கவனித்தல் வேண்டும். இங்குப் பெயர்தந்த பெரியார்களுடைய வாழ்க்கை வரலாறும், அவர் செய்த அரும்பணிகளும் காலக் குறிப்புகளோடு நமக்குத் தெரிவதால் அவற்றைப் பிணைத்து எழுதுவதில் அதிகம் கஷ்டமிராது. ஆனால், திருவள்ளுவர், கம்பர், இளங்கோ போன்ற பேராசிரியர்களுடைய வாழ்க்கை பற்றி எழுத, திட்டமான குறிப்புகள் நமக்குக் கிடைப்பதில்லை. வேறுபட்ட கர்ண பரம்பரைச் செய்திகளே நமக்கு இன்னார் சரிதங்களாகின்றன. எனவே இவற்றினைக் குறிப்பிடுவதில் அதிக சிரத்தை கொள்ளாது, அவர்தம் அழியா வேலைகளான நூல்களைக்கொண்டு அகச் சான்றுடன் இயன்றவற்றைக் கூறுதலும், அந்நூல்களின் சிறப்பு முதலியவற்றை எடுத்து அவர் தம் பெருமையைக் கூறுதலுமே முக்கியமென்பதை உயர் வகுப்பு மாணவர் அவசியம் கவனிக்கவேண்டும். இன்னாருடைய காலத்தைக் குறிப்பிட்டுக்கூற இயன்றவரை ஆதாரம் காட்டுதல் பயன் தரும்.

உதாரணமாக, ஆறுமுக நாவலரைப்பற்றி எழுதுமாறு கேட்டால் உயர் வகுப்பு மாணவர் ஒருவர் பின்வருவனப்போலக் குறிப்புகள் எடுத்துக்கொள்ளலாம் :—

A. முகவுரை.

B. விஷய விரி.

I. வாழ்ந்த காலமும் அப்போது நாட்டின் நிலையும்.

II. இவரது கலைத்திறனும் மதப்பற்றும்.

III. இவராற்றிய அரிய சேவைகள்.

1. இந்து சமயத்துக்குச் செய்தவை.
2. தமிழ் வசன நடைக்குச் செய்தவை.
3. அச்சில் கொணர்ந்தவும், புதிதாக எழுதியனவுமான இலக்கண, இலக்கிய, நூல்கள், கண்டனங்கள் என்பன.

IV. தமிழுலகில் இவர்பெற்ற முக்கியத்துவம்.

C. முடிவுரை.

I. இவரைப் போற்றி, இவரைப் பின்பற்றி நாம் செய்ய வேண்டுவன.

இக்குறிப்புகளைப் பூர்த்திப் படுத்தும்போது முக்கியமான செய்திகள் பெரும்பாலாக அடங்கக் காணலாம். இப்படியே மற்றும் பெரியோர் வரலாறுகள், வேலைகள்பற்றி ஏற்ற குறிப்புகள்கொண்டு எழுத முயலுதல்வேண்டும். நடுத்தர வகுப்பினரும், மற்றும் கீழ் வகுப்பு மாணவரும் இதே குறிப்புகளைத் தொட்டுக்கொண்டே வாழ்க்கையைக் கதைபோல் எழுதக் கற்பிக்கப்படலாம்.

கடிதம் எழுதும் முறை முதலியன ஆரம்ப வகுப்புகளிலிருந்தே கற்பிக்கப்படுகின்றன. காலத்

துக்கேற்பக் கடித எழுத்து நடையும் மாறிவருகின்றதெனினும் இன்றியமையாத சில கட்டளைகள் என்றும் மாறாதனவாம்.

4. கடிதம் எழுதுதல்

பெரும்பாலாக உறவினர்க்கு எழுதும் கடிதங்களும், உத்தியோக முறையான கடிதங்களும், வியாபாரக் கடிதங்களுமெனக் கடிதங்களை வகைப்படுத்தலாம். கடிதத் தொடக்கத்துக்கும், முடிவுக்கும் இந்தப் பிரிவு இன்றியமையாது கவனிக்கப்பட வேண்டியதாகின்றது.

நம்முறவினர், நண்பர் முதலியோர்க்கு அன்னார் பெயர்களையோ, அன்றி உறவு முறைகளை மட்டுமோ குறித்து எழுதலாம். பெரியோர்களுக்கு வணக்கங் கூறித் தொடங்கல் அவசியமாகும். இக்கடிதங்களில் நாம் சுகசேதிகளைப்பற்றிய விசாரணைகள் மூலம் சாதாரணமாகவே தொடங்கலாம். சுகம் விசாரிப்பதைத் தொடக்கத்தில் எழுதுதல் நன்றல்லவென்று இக்காலத்துச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். சாதாரணமாக எச்சாதியினரும், எப்பாஷையினரும் தமக்கு அறிமுகமான ஒருவரை ஒருவர் காணும்போதுகூட, இன்றும் சுகசேதிகளைக்கேட்டே பேசத்தொடங்குகின்ற வழக்கம் இருக்கின்றது. அன்புப் பிணிப்பில் உள்ள இத்தகையோர், சுகசேதிகளையே முதலில் அறிய அவாவுவராதலில், எழுதும்போதும், அதைப்பற்றி முதலில் குறிப்பது அழகுக் குறைவாகாதென்னலாம். எழுதுவோரது விலாசம் திகதி என்பவற்றைக் கடித முடிவிலும் எழுதலாமெனக் கருதப்படினும், தொடக்கத்தில் வலக்கை மூலையில் போடுவது தான் நல்ல முறை. உத்தியோகக் கடிதங்களில் முதலில் நமது விலாசமும், பின்னர் எழுதப்படுபவரது உத்தியோகப் பெயர் விலாசம் என்பனவும், பின் எழுதப்படும் விஷயத்தின் தலையங்கமும் கொடுக்கவேண்

டும். இவ்வாங்கில முறைக் கடிதத்தையே நம் முன்னோர் வருமாறு எழுதி வந்தனர்:—

"வடக்கு மாகாண அரசினர் ஏஜண்டுத் துரையவர்கள் சமுகத்துக்கு, யாழ்ப்பாணத்து 4ம் வட்டாரத்து 16ம் இலக்க வீட்டில் வசிக்கும் கந்தப்பிள்ளை—சரவணமுத்து ஆகிய நான் அதிக தாழ்மையுடன் எழுதிக்கொள்ளும் விண்ணப்பமாவது." இதை நாம் ஒழுங்காக மாற்றி மேற்கூறிய முறையில் அமைப்பது நன்று. வியாபாரமுறையான கடிதங்களில் அதிகம் வருணனைகள் எழுதுதல் நல்லதன்று. நாம் எடுத்துக் கொண்ட விஷயம் தெளிவாகவும் சுருக்கமாகவும் இருப்பதே இவற்றிற் கவனிக்கப்படவேண்டும்.

'கட் குடித்தலின் தீமையை விளக்கி உமது நண்பன் ஒருவனுக்குக் கடிதம் ஒன்று எழுது' என்பதுபோல உயர்வகுப்பு மாணவர்கள் கேட்கப்படுகின்றனர். 'கட் குடித்தலின் தீமைகள்' என்னும் தலைப்பில் எழுதக்கூடிய கட்டுரைப் பொருளைக் கடித முறையில்—ஒருவருக்குக் கூறுவதுபோல இங்கே எழுதுவது பொருத்தம். இப்படியானவற்றில் அந்நண்பரும் தானும் முன்னர் நேரிற்கண்ட உண்மைகள் சிலவற்றை ஞாபகமூட்டியும், இன்னும் சந்தர்ப்பத்துக்கேற்ற குறிப்புகள் முதலியவற்றை இடையிடையே திணித்தும் கடிதத்தை இனிமைப்படுத்திக் காட்டவேண்டும். அறிஞர்கள் எழுதிய கடிதங்கள் பல மற்றையோர்க்குப் பெருநூற் தொகுப்புகளாக மாறுவதை நாம் காண்கின்றோம். சுவாமி விவேகானந்தர் தம் சீடர்களுக்கெழுதிய கடிதங்கள் வேதாந்தம், அரசியல் எல்லாம் பொலிந்த பெரிய கட்டுரைகளன்றோ. பண்டித ஜவகர்லால் நேரு தம் புத்திரிக்கெழுதிய கடிதங்கள் சிறந்த உலக சரித்திரமாகத் தொகுக்கப்பட்டி-

ருக்கின்றதல்லவா? வாழைப் பழத்துள் மருந்தைத் தீற்றியளிப்பதுபோல் உயர்ந்த கட்டுரைப் பொருளை இனிய கடித முறையில் எப்படிப் புகுத்திக் காட்டலாம் என்பதற்கு மாணவர்கள் இப்படியான தொகுப்புகளைப்பார்த்து அறிந்துகொள்வதும், தாம் அப்படி எழுதப் பயில்வதும் பெரும் பயன் தருவன.

மாதிரிக் கட்டுரைகள் ஒரு சில பின்வரும் முறையே காட்டப்பெறுகின்றன.

5. கட்டுரைகள்

1. தமிழின் சிறப்பு.
2. பெண்கள் கல்வி.
3. விபுலானந்த சுவாமிகள்.
4. விஞ்ஞானக் கலை வளர்ச்சி.
5. உழவுத் தொழில்.
6. இலங்கையின் பொருளாதாரம்.
7. (இலங்கையிற் சமீபத்தில் வந்த) வெள்ளப் பெருக்கு.
8. தேசீய சேமிப்பு இயக்கத்தின் நோக்கமும் பயனும்.

1. தமிழின் சிறப்பு

தமிழ் நமது தாய்மொழி. 'தமிழ்'—என்றால் இனிமை என்று அறிஞர் கூறி மகிழுகின்றனர். ஆனால் உயர்ந்த உத்தியோகமும், வருவாயும் தருவதாக இருந்த அந்நிய ஆங்கில மோகம் தமிழ் மக்களைத் தமிழில் பேசுவதே தாழ்வு எனக் கருதச் செய்தது. நல்லவேளையாக இந்நிலைமாறி "தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று தமிழர்

கள் நட்டி யெழுப்பப்பெற்றுத் தமிழர்க்குத் தமிழ் முதன்மையாக வந்துகொண்டிருக்கிற இத்தருணத்தில் இதன் அருமை பெருமைகளை நாம் அறிவது அவசியமாகும்.

தமிழின் சிறப்புகளை நாம் ஆராயும்போது இதன் பழமை முதன்மை பெற்று நிற்கின்றது. மிகப் பழமையான காலத்து இலக்கியங்கள் தமிழில் உள்ளன. ஆரியம், சீனம், லத்தீன், கிரேக்கு போன்ற ஒரு சில மொழிகளில் மட்டுமே தமிழிலக்கியங்களளவு பழமையானவை உண்டெனப் பன்மொழி அறிஞர் கூறுகின்றார்கள். மூன்று சங்கங்கள் முறையே ஆயிரக்கணக்கான வருடங்களாக நடைபெற்று வந்ததென அறிகிறோம். இவற்றுள் இடைச்சங்க கால நூல் என்று கருதப்படுவதும், இன்று கிடைக்கும் தமிழ் நூல்களுள் மிகப் பழமையானதுமான தொல்காப்பியம் எனும் நூலின் சிறப்பையும், அது எழுந்த காலத்தையும் நாம் நோக்கினால் நம் தமிழ்மொழி எவ்வளவு பழங்காலத்தில் உண்டாகித் திருந்தியிருக்க வேண்டுமென்று புலப்படும். அக்காலத்தேயே இம்மொழியைத் துருவித் துருவி ஆராய்ந்து பிழை நீக்கி வளர்த்து வந்தனர் நம் தமிழ் மூதாதையர். இத்தகைய சிறப்பினையே மாணிக்கவாசக சுவாமிகள் "கூடலிணைந்த ஒண்தீந்தமிழ்" என்று மகிழ்ந்து கூறுகின்றார். "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத், திருப்பிலேயிருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை" என்று இதன் வரலாற்றுப் பெருமையைக் கூறி வாழ்த்துகிறார் வில்லிபுத்தூராழ்வார்.

'சங்கத்தமிழ்' என்று அடை கொடுத்துப் பேசுகின்றனர் ஔவையார். சங்கத்தமிழின் இனிமைக்கு ஈடு பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் கலந்

தாலும் வராதென்பது அவரின் தீர்ப்பு. இவ்வுண்மையைச் சங்கநூல் படியாதார் உணரமாட்டார். சங்கமிருந்து வளர்க்கப்பெற்ற பெருமை நந்தமிழ் மொழி ஒன்றுக்கு மட்டுமே உளது. அச்சங்க காலங்களில் எழுந்தவற்றுள் நமக்கு இன்று கிடைப்பன பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும், பதினெண் கீழ்க்கணக்கும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும், தொல்காப்பியமும், இறையனார் அகப்பொருளும் ஆகிய நாற்பது நூல்கள் மட்டுமே. இந்நூல்களிலே தமிழின் சுவையை நாம் உள்ளவாறு காணலாம். தமிழிலக்கியங்களெல்லாம் காதலும், போரும், வெறும் வர்ணனைகளும் மட்டுமே என்று பிதற்றுவார் சங்க இலக்கியங்களை ஆழ்ந்து கல்லாதோர் என்றே கூற வேண்டும். உயர்ந்த கற்பனைகளோடு சுருங்கச் சொல்லல், பொருளாளமுடைமை, நவின்றோர்க்கினிய நன்மொழி புணர்த்தல் முதலிய நல்ல பண்புகளை இவை கொண்டு விளக்குகின்றன. ஐம்பெருங் காப்பியங்களும், புராண இதிகாசங்களுமாகக் கடல்போற் பரந்த இலக்கியங்கள் தமிழில் உள. தேவார திருவாசகம், கோவை, திருமந்திரம் முதலிய சிறந்த பல சமய நூல்களும், தொல்காப்பியம், களவியல், நன்னூல் முதலிய பல இலக்கண நூல்களும் நிறைந்து தனித்து நின்றியங்கும் வலிமைகொண்டு விளங்குவது நம் தமிழ் மொழி. இதனையன்றோ சோமசுந்தரப் புலவர்;

"திரிபுரமெரித்த குறுநகைக் கடவுளும்
குன்றமெறிந்த வென்றிவேன் முருகனும்
முறை முறையாய்ந்து பிழைதப நிறுவியது
அகத்தியன் முதலாத் தவத்தனி முனிவர்
தொகுத்த விலக்கணத் தொல்வரம் புடையது
பொய்தவிர் நாவிற் புலவர்க ளருளிய

மெய்வளர் இலக்கிய விரிகட லுடையது
தெய்வம் பராவிய திருமறை யுடையது.
இளையது பழைய திருமையுந் தருவ
தமிழ்தினு மினிய தரியது பெரியது
வழிவழியழியா முதுசொமாய் வருவது"

எனச் சிறப்பித்தார்.

பல பாஷைகட்கும் பிறப்பிடமாகியும் இது அழியாத தெய்வத்தன்மை பொருந்தியது. இதனை

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந் துளுவும்
உன்னுதரந் துதித்தெழுந்தே ஒன்று பலவாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"

என வியந்து மெய்ம றந்து வாழ்த்துகின்றார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள்.

தமிழ் மொழியை 'நீதிநூற் களஞ்சியம்' என்று மேல்நாட்டாசிரியர்கள் கூறுகின்றார்கள். தமிழ் நீதி நூல்களுள் முதன்மையான திருக்குறள் போன்று, உலகில் எந்த மொழியிலுமே ஒரு நூல் இல்லையென்று உலகம் ஏற்றுக்கொள்கின்றது. இச்சிறப்பினால் திருக்குறள் இன்று பல பாஷைகளிலும் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளது இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த நூலைப்பெற்று விளங்கும் சிறப்ட, நம் தமிழுக்கே தனித்ததன்றோ. இதுபோலவே மென்மையிலும், இனிமையிலும் தமிழ் சிறந்ததென்பதைத் தமிழ் கற்றுணர்ந்த மேனாட்டாரும் ஏற்றுக் கொள்ளுகின்றார்கள். பன்மொழியறிஞரான பாரதியார் இம்மொழியின் ஆரா இனிமையில் திளைத்து

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்" என்று எதிர் இன்றிக் கூறியுள்ளார். "**தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**"—என்று தமிழின் இனிமையிற் சொக்கி நம்மையும் அதிற் சொக்கி மகிழவைக்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாஸன்.

அகவிருள், புறவிருள் என இருள் வகை இரண்டே. இவற்றுள் புறவிருளை ஞாயிறு நீக்குவது போல, அகவிருளைத் தமிழ் நீக்கி விளக்கும் என்று ஒரு பழைய கவிஞர் கூறி வைத்திருக்கிறார்.

"ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னேர் இலாத தமிழ்."

என்பது அவரது தீர்ப்பு. மக்கள் தமிழ் மொழி போல் இனியபான்மையினர் என உவமைகாட்டி "**தமிழ் தழீஇய சாயலவர்**" என்கிறார் சீவக சிந்தாமணியாசிரியர். இவ்வாறு, உவமைக்கும்கூட இதன் இனிமை காட்டப்பட்டுத் தமிழ் சிறந்து விளங்குகின்றது இதுபோல் தமிழின் பெருமையும் சிறப்பும் காணும் பகுதிகள் தமிழ் நூல்களில் மிகப்பல.

இப்படிச் செல்வமும் சிறப்பும் வாய்ந்த தமிழ் மொழிக்குத் தமிழர்களாயுள்ள நாம் காலப்போக்கை ஒட்டிச் செய்யவேண்டிய கடமைகள் பலவுள. இவற்றுள் முக்கியமானவற்றை அமரகவி பாரதியாரின் கூற்றுப்படியே தந்துவிடுகின்றேன்.

(1) "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்."

(2) "இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்."

(3) "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."

விஞ்ஞானம் போன்ற புதுக்கலைகள் மேனாட்டு ஆங்கிலம் முதலிய மொழிகளில் உள்ளன. அவற்றைத் தமிழிற் கொணர்ந்து தமிழை வளம்படுத்தல் நம் கடமை. புதுப்புது முறையான சிறந்த நூல்கள், கம்பன், வள்ளுவன், இளங்கோ இவர்களுடையவை போல இன்னும் வரவேண்டும். இத்துறையில் வசன நடையிலும், செய்யுள் நடையிலும் பல அறிஞர் முயற்சித்து வருவது போற்றத்தக்கது. சொல்லமுடியாத தித்திப்பு வாய்ந்த இன்தீந்தமிழின் ஓசை உலகெங்கும் கேட்கவேண்டுமென்று பாரதியார் விரும்புகிறார். அரசியற் புரட்சிகளின் பயனாக நம் நாடு சுதந்திரமடைகிறது. தமிழர் சுதந்திரம் தமிழின் சுதந்திரம், சுதந்திர மொழிக்கும், சுதந்திர நாட்டானுக்கும் அரசியல் அரங்கில் செல்வாக்குண்டு. அப்போ 'அடிமைப் பாஷை' என்ற எண்ணம் நீங்கிச் சிறப்பியல்களின் ஒப்பு நோக்கத்தால் மற்றோர் உள்ளத்தை நம் பாஷை தொடும். தமிழ் நாட்டின் இப்போதைய வேகத்தில் இத்தகைய பெருமைப்பாடு நம் மொழிக்குக் கிடைக்க அதிககாலம் பிடிக்காது எனலாம். தமிழர் உணர்ச்சியும், வீறும் மிக்கவர். பல துறைகளிலும் வென்று முன்னின்று புகழ்பெற்றுவரும் தீரர்களின் முயற்சி தோல்வியுறப்போவதில்லை.

"திருமுடி சூட்டுவோம் தெய்வத் தமிழ் மொழிக்கே" என்று தமிழணங்கின் முடிசூட்டு விழாவிற்கு நம்மை நாமக்கல் கவிஞர் அழைக்கின்றார். விரைந்து செல்வோம். சென்று விழாவைக்கூட்டி, முடிசூட்டி, 'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே' என்று தமிழன்னையை வாழ்த்தி வணங்குவோம்.

2. பெண்கள் கல்வி

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று வைதிகங்கள் பெண்களை மட்டந்தட்டிக் கொண்டிருந்த காலத்தில், "எட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர் மாண்டு விட்டார் வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்று பெண் குலம் முழுவதையும் தட்டியெழுப்பினார் அமரகவி பாரதியார். அரசியலிலும், மற்றும் பல துறைகளிலும் பெண்கள் ஆண்களோடு சரிநிகர் சமானமாக முன்னேறு மிக்காலத்தே பெண்கள் கல்வியை நாம் புறக்கணித்துவிட முடியுமா!

நம் தமிழ் மக்களின் பழங்கால வாழ்க்கையைப் புரட்டிப் பார்ப்போமானால் அங்கே பெண்களுக்குக் கொடுக்கப்பெற்றிருந்த கல்வியையும், பெருமையையும் காணுவோம். சங்கநூற் பாடல்களின் ஆசிரியர்களாகப் பெயர் காணப்படுபவர் சுமார் 440 புலவர்கள். இவர்களுள் ஔவையார், வெள்ளிவீதியார் முதல் 27 பேர் பெண் புலவர் திலகங்களாகக் காண்கிறோம். கல்வி நாகரீகம் மக்களிடை நன்கு பரவியிருக்கவில்லை எனக்கருதப்படும் அக்காலத்தேயே இப்படிப் பெண்கள் கல்வியுலகில் முன்னின்றிருக்கின்ற

னர். கல்வி படிந்த நற்பண்பாடு அன்னாரை ஊக்கியதாலேதான், 'நாட்டு மானங் காத்திடவே நம்முயிரை நல்குவோ'மென்று, தம் ஒரே மகனையும் போர்க்கனுப்பிய மறக்குல மகளிர் பெருமை இன்றும் விளங்குகின்றது. ஒளவையின் ஆத்திசூடி முதற் புறநானூற்றுப் பாடல்வரை யாவும் எல்லாத் தரத்தினர்க்கும் ஏற்றனவாகி, நல்லறிவூட்டுகின்றன. இப்படியிருந்த போதிலும் வரவரப் பெண்களிற் பெரும்பாலோர் ஆண்களுக்குக் கட்டுப்பட்டு அடுப்பங்கரை வாசத்திலே வெளியுலகமறியாது தங்கியிருந்தனர். கல்வி கற்பது மானவீனம் என்று பல உயர் குடும்பப் பெண்கள் கருத வைக்கப்பெற்றனர். இவ்வேளைகளில் தீவிர வாதிகள் சிலர் இடைக்கிடை தோன்றிப் பெரும் உணர்ச்சி புயல்வீசி அவர்களைக் கிளர்த்தி வைத்தனர். அடங்கிக் கிடந்த தமிழ் மகளிர் பாரதியினால் வெளிக்கிளம்பினர். பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதும், பாரினிற் பெண்கள் நடத்தவந்தோம்—எட்டு மறிவினிலாணுக்கிங்கே பெண்ணிளைப்பில்லைக்கா'ணென்று கும்மியடித்தனர். உணர்ச்சியும், கலைப்பெருக்கும் அவர்களை நாகரீக உலகில் முன்நிறுத்திக் காட்டின.

உலக முழுவதும் இன்று பெண்கள் முன்னேறி வருகின்றார்கள். உயர்ந்த கல்வி, மாதர்களின் பதுங்கிக்கிடக்கும் தன்மையை அகற்றி அவர்களை முன்னுக்குக் கொணர்ந்தது. விமானச் சாரத்தியம், நீச்சுப் போட்டி முதலியவற்றில் எல்லாம் முதலாவதாக வெற்றிபெற்றிருப்போர் பெண்களென்று அறிகிறோம். விஞ்ஞான ஆராய்ச்சி, வைத்தியக்கலை, சட்டக்கல்விப் பயிற்சி முதலியவற்றிலும் பெண்கள் முன்னின்று பெரும் புகழீட்டுகின்றனர். சர்வகலாசாலைகளெல்லாம் இவற்றில் பெண் பாலார்க்கும் சரிபங்கு

கொடுத்துவருகின்றன. இலக்கியம், சித்திரம், இசை முதலிய முக்கிய இன்பக்கலைகளும், தையல், வீட்டுப் பணி, சுகாதாரம் முதலிய குடும்ப நிர்வாகக் கலைகளும் பெண்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. கிழக்கு நாடுகளின் பெருமையை அகில உலகுக்கும் காட்டிய கவியரசி சரோஜினி தேவியாரும், ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டும் நாம் கண்ணாற்கண்ட பெண்கள் திலகங்களாயிருக்கின்றனர். பெண் கல்வியின் அவசியத்தை இன்னாருடைய பெருமை நமக்கு நன்கு காட்டவில்லையா!

இப்படிக் கண்ணாரக் கண்டும் மூட நம்பிக்கைகளுக்குக் கட்டுப்பட்டுப் பெண்குல முன்னேற்றத்தைத் தடுக்கும் 'பிரகஸ்பதி'களும் நம்மிடை இல்லாமலில்லை. பெண்கள் பிரசவ யந்திரங்களென்றும், சமையற்கூடத்து ராணிகளென்றும் இவர்கள் கூறுகின்றார்கள். பெண்கள் வெளிச்செல்வதும், ஆண்களுடன் பழகுவதும் கற்புக்குப் பழுதாமென்று சொல்கிறார்கள்.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

என்று வள்ளுவநாயனார் கூறுவதைக் கூர்ந்து இவர்கள் நோக்குவதில்லை. வீரமும், அறிவும், பெருந்தன்மையும் நிறைந்தவர்களாக மக்களை வளர்க்கத் தாய்மார் கல்விகற்றோராக இருத்தல் அவசியம் என்பதை இவர்கள் அறியார். பெண்களின் மிருதுத் தன்மையும், சகிப்புத் தன்மையும், சந்தர்ப்பத்துக்கேற்ப அவர்பால் தோன்றும் உயந்த புத்தி சாதுரியமும நல்ல உயர்ந்த கருமங்கள் பலவற்றைச் சாதிக்க மிக உதவியாயிருக்கின்றதை இவர்கள் நோக்குவதில்லை. 'பெண்கள் ஏழைமனத்தினர்' என்றும், 'எண்ணறக்

கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி' என்றும் பழமொழி காட்டிப் பெண்களை இழிவு படுத்துகின்றனர். அடக்கி ஒடுக்கப்பெறுகிற காரணத்தினால் இவ்வாறு பெண்கள் பயந்து கோழைகளாக ஏற்படுகின்றதேயன்றி, உண்மையில் பெண்கள் அப்படித்தான் இருப்பர் என இக்காலத்தில் கூறமுடியாது. அப்படிக் கூறுவோர், விஜயலட்சுமி பண்டிட் போன்ற பெண்ணரசிகளின் பேச்சுக்காற்ருது பின் கதவு வழியாகத் தப்பியோடிய அரசியற் புலிகளை அறிகிலார் போலும். கல்வி கற்ற எந்த ஒரு ஆணும் அல்லது பெண்ணும் இத்தகைய மூடக்கொள்கை வாதிகளுக்குப் புத்தி புகட்டிப் பெண்களுக்கு உயர்ந்த கல்வியளிப்பதில் உழைத்து நம் நாட்டு நலத்தைப் பேணவேண்டும்.

வெளி நாடுகளுக்குச் சென்று, சிறந்த பல்வகைக் கல்விகளும் கற்றுவரப் பெண்களை நாம் ஊக்கவேண்டும். படைப் பயிற்சி முதலிய உடற்பயிற்சிகளையும் நம் பெண்கள் கற்கவேண்டியவர்களாகின்றனர். நூதனமான கைவேலைகளும், ஓவியம், நடனம் முதலியனவும் நம் பெண்கள் விசேஷமாகக் கற்கத்தக்க ஒழுங்குகள் செய்யப்பெறவேண்டும். இன்னும் இவை போன்று அவசிய கலைகளை ஊட்டத்தக்க ஏற்பாடுகள் செய்து பெண் மக்களின் கல்வி நிலையை உயர்த்தி, அதனுல் அறிவுச் சுடரை நாடெங்கும் கொழுவ வேண்டும்.

தாம் கற்பதனுல் கலையும், நாகரிகமும் சிறந்து நாடு நல்ல மனித் சமுதாயத்துக்கிருப்பிடமாகிற தென்பதை நன்குணர்ந்து பெண்கள் யாவரும் வீறு கொண்டெழுதல் பெண் பாலர் கடமையுமாகும்.

3. விபுலாநந்த சுவாமிகள்

இருபதாம் நூற்ருண்டில் வாழ்ந்த தமிழ்ப் பெரியார்களுள் முதற்கண் வைத்து எண்ணத்தக்க பெருமை உயர்திரு விபுலாநந்த சுவாமிகளுக்குண்டு. ஆங்கிலமும், அருந்தமிழும், ஆரியமும் தெளியக் கற்றுணர்ந்த இச்சீரியர் இசைத் தமிழுக்கும், நாடகத் தமிழுக்கும் செய்த சேவைகள் மிகவும் பாராட்டத் தக்கன. நம்மீழத்துப் பிறந்து, எல்லோரும் போற்ற வாழ்ந்து, அண்மையில் நம்மைவிட்டு அகன்ற சுவாமிகளது பெரும்பிரிவு தமிழுலகத்துக்கு ஈடுசெய்யமுடியாத ஒரு நட்டமாகும்.

நீலக்கடல் நடுவண் நித்திலத்தீவமாக விளங்குவதும், சுவாமிகளாலே :

“மாவலியின் பேரால் வயங்கு மணி நதியும்
காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி இரத்தினத் தீவமென
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கை.”

என வருணிக்கப்பட்டதுமான ஈழத்தில் கிழக்கே பரந்து கிடக்கும் மட்டக்களப்பு என்னும் நிலப்பரப்பு மிகப்பழைய ஒரு தமிழகமாகும். இங்கே தென்பாலுள்ள வளஞ்சார்ந்த ‘காரைதீவு’ என்னும் மூதூரில் கல்வியும் செல்வமும் சிறந்த சீர்சால் வேளாள மரபில் உதித்த சுவாமிநாதர் எனும் பெரியாருக்கு மகனுக மயில்வாகனம் என்பார் 1892ம் ஆண்டு பிறந்தார். கல்விகளெல்லாம் உரிய பருவத்தே கற்றனர். ஆங்கில மொழியுடன் தமிழும் கற்றுவந்து 1920ம் ஆண்டு இலங்கையின் முதல் மணியாக மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையிற் சித்திபெற்றுப்

பண்டித மயில்வாகனனார் ஆனார். அரசினர் ஆசிரிய கல்லூரியிற் பயிற்றப்பட்ட ஆசிரியராவதோடு, கொழும்புச் சர்வகலாசாலைக் கல்லூரியிற் கற்று லண்டன்மா நகரப் பல்கலைக்கழகப் பௌதிக சாஸ்திரப் பட்டப் (B. Sc. Lond.) பரீட்சையிலும் தேறினார். கணிதம், விஞ்ஞானம், இலக்கியம் முதலிய பாடங்களில் இவர் இணையற்று விளங்கினர். தமது கல்விக்கேற்ப இளமையிலேயே ஆசிரியத் தொழிலிலமர்ந்தார். தளர்நிலையில் நின்ற மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அதிபராகி (Principal) திறம்படச் சேவை புரிந்தார். ஆசிரியர்களும், மாணவர்களும் இவர் திறமையைக் கொண்டாடினர்.

அப்பால் உலக நிலையாமையை உணர்ந்து மெய்யுணர்வுபெற இராமகிருஷ்ண சங்கம் சார்ந்து துறவியாகி விபுலாநந்த அடிகளாரானார். மடத்திலும் கல்விப் பகுதியிலேயே அதிகம் உழைத்து, இராமகிருஷ்ண விஜயம், வேதாந்த கேசரி என்னும் பத்திரிகைகட்கும்; பிற்காலத்தே, உலகம் புகழும் பிரபுத்த பாரதம் என்னும் ஆங்கில மாத வெளியீட்டுக்கும் ஆசிரியராக இருந்துள்ளார். விவேகானந்த சம்பாஷணைகள் முதற்பல நூல்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கினார். **நடராஜர் திருவடிவம், மதங்க சூளாமணி** எனும் அரிய நாடகத் தமிழ் நூல்கள் இக்காலத்தே மேலும் எழுதப்பட்டன. சமஸ்கிருதமும், ஆங்கிலமும் நிறையக்கற்ற புலமையுடைய சுவாமிகளன்றி, வேறெவரும் நினைக்கவும் முடியாத வகையில் செகசிற்பியார் (Shakespeare) எழுதிய ஆங்கில நாடகங்களையும், தனஞ்சயனார் வடமொழியிற் செய்த 'தசரூபகத்'தையும் மதங்க சூளாமணியாகத் தமிழர்க்களித்தார்கள்.

துறவின்போது இலங்கையின் கல்விக்கான சேவைகள் செய்யச் சுவாமிகளுக்கு நிறையத் தருணம் கிடைத்தது. திருக்கோணமலை இந்துக் கல்லூரிக்கும், மட்டக்களப்புச் சிவாநந்த வித்தியாலயத்துக்கும் முறையே அதிபராகச் சிலகாலம் இருந்தார். இக்காலத்திலேயே சுவாமிகள் திருக்கைலாய யாத்திரை செய்துவந்தனர். இராமகிருஷ்ண பாடசாலைகளுக்கு முகாமைக்காரராக (General Manager) இருந்து இவர் இந்து மதத்துக்கும், தமிழுக்கும் செய்த சேவை மிகப்பல. மட்டக்களப்பில் இவரால் ஸ்தாபிக்கப்பெற்ற இந்துமத பாடசாலைகள் பலவுள. **'சிவாநந்த வித்தியாலயம்'** எனும் உயர்தர ஆங்கிலக் கலாசாலை ('A' Grade High School) இவரது இலட்சிய ஸ்தாபனம். இவருடைய அருஞ் சேவைகளுக்கான ஞாபக சின்னமாக அது இன்று விளங்குகின்றது.

சுவாமிகளின் பெருமை, பல பாகங்களிலும் அவர் செய்த அரிய சொற்பொழிவுகளில் கண்டு கொண்டாடப்பெற்றது. அண்ணாமலைச் சர்வகலாசாலைக்குத் தமிழ்ப் பேராசிரியராக இவரைச் சிலகாலம் பெற்றுத் தமிழ்நாடு நலமடைந்தது. 'செந்தமிழ்', 'தமிழ்ப்பொழில்', 'கலைமகள்' போன்ற மாத வெளியீடுகளில் சுவாமிகள் சிறந்த கட்டுரைகள் எழுதித் தமிழுலகை மகிழ்வித்தனர். 'மணிமலரிலே' சுவாமிகள் எழுதிய 'ஆங்கில வாணி' அறிஞர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். இத்தகைய பெருமைகளை வியந்தே

"இந்திய வாணியை ஆங்கில பீடத்தேற்றிய புதுமையினோன்
தோழமைகொள் வடமொழி மயமாகிய தொன்மையிசைத் தமிழைத்
தூயதனித்தமிழ் வடிவிற்தோற்றிய தந்தையெனுந் துணையான்"

என்றும்; "இமயத்தலையிற் தமிழ்முத்திரைவரை ஈழக் கரிகாலன், சீரேறுந்தமிழறிவர்க் காங்கில நூற்சுவை நிலைகூட்டித் தெருட்டும் புதுமைக் கபிலன், கலியுக தெய்வ அகத்தியனும் பாரேறும் புகழாளன்................பன்மொழி விபுலாநந்தன்"—என்றும் மட்டக்களப்பு மகா வித்துவான் பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் பாடினார்கள்.

முத்தமிழ்ப் புலவராய அடிகள் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக நான்கு வருடகாலம் இருந்து பெரும்பணியாற்றினார்கள் தாம் பதினெட்டு வருடமாகச் செய்துவந்த இசை ஆராய்ச்சியின் பயனாகக் கிடைத்த '**யாழ் நூல்**' இக்காலத்தின் கடைசிப் பகுதியில் (ஆனி 1947) கரந்தைத் தமிழ்ச் சங்கத்து ஆதரவில் அரங்கேற்றப்பட்டது. பழந்தமிழரது இசைப்பரப்பினைத் துருவி நமக்குக்காட்டும் அரும் பொக்கிஷமான இதைத்தந்ததும் தம் கடமை இவ்வுலகில் முடிந்ததென்றெண்ணினார் போலும்!

கொழும்பு இராமகிருஷ்ண மடத்தில் அவ்வாண்டு ஆடி மாதம் 19ந் திகதி எதிர்பாராதவிதமாய் விண்ணுலகேகிவிட்டார். தமிழ் தவித்தது. தமிழ்நாடு கலங்கியது.

"சரிகமவும் பதநிசவும் தனித்தனியே வடித்தெடுத்துப்
புரிவுறநல் லிசையமுதாய்ப் புவிக்களித்தாய். புலவோர்கள்
பரிவுறஇங் கழுதரற்றிப் படுதுயரம் தனிலாழப்
பிரிவுறவு செய்தனையே! பெருமுனிவ வருவாயோ!"

என அன்பர்களும் மாணவர்களும் அலறி நின்றனர். பயன் என்ன! சுவாமிகளுடைய ஆன்மதலமான

சிவானந்த வித்தியாலயத்து அவரது திருவுடல் கொண்டுவந்து சமாதி வைக்கப்பட்டிருக்கிறது. 'பொற்கால அகத்தியரும்', மட்டக்களப்பின் 'ஆறுமுக நாவலரும்', சிவானந்த வித்தியாலயம் என்னும் சாந்திநிகேதனத்தின் 'தாகூரும்' ஆன சுவாமிகள் போய்விட்டார். அவர் எழுதிய இறவாத புகழுடைய புது நூல்கள் மிஞ்சியிருக்கின்றன. படித்துப் பயனடைவதே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்!

4. விஞ்ஞானக் கலை வளர்ச்சி

இது விஞ்ஞான உலகம். இன்று மனித வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் பங்குபெற்றுள்ளது விஞ்ஞானத்தின் சக்தி. இயற்கையின் தத்துவங்களை நுண்ணுணர்வினால் ஆராய்ந்து அவற்றைத் தமக்கேற்ற உபயோகத்துக்கெடுத்தனர் விஞ்ஞானிகள். அவர்களுடைய சக்தியால் இன்றைய மனிதன் அடைந்திருக்கும் முன்னேற்றங்கள் அளவிறந்தனவாகும்.

உலகின் சரித்திரத்தில் ஏற்பட்ட தீவிர மாறுதல்களுக்கெல்லாம் முக்கிய காரணம் விஞ்ஞானக் கலையென்றே சொல்லவேண்டும். மனிதன் ஆதியில் கற்குகைகளிலும், மர நிழல்களிலும் வாழ்ந்தான். கற்களை ஆயுதமாக்கி வேடுவ வாழ்க்கை நடத்தினான். பின்னர் முறையே இடையனாகவும், உழவனாகவும், கைத்தொழிலாளனாகவும் முன்னேறிவந்தனன் எனச் சரித்திரம் கூறும். இந்த மாறுதல்களிலெல்லாம் மனிதன் அறிந்தோ அறியாமலோ விஞ்ஞானத்தைப் பயன்படுத்தியே இருக்கிறான். ஆனால் இயற்கையின் தத்துவங்களை ஆராய்வதில் மக்கள் மிகத்தீவிரமாக உழைக்

கத் தொடங்கியது மிகப் பிற்காலத்திலேதான். 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே இக்கலையின் முக்கியத்துவம் மக்களைக் கவர்ந்துகொண்டது.

கி. பி. 1564—1642ல் வாழ்ந்த கலிலியோ என்பார் வானமண்டலத்துள்ள உலகங்களைக்காண உதவியான தொலை நோக்காடியை (Telescope) கண்டுபிடித்தனர். சந்திரமண்டலத்தில் மலைகள் ஆறுகள் உண்டென இக்கண்ணாடி காட்டியது. அரிஸ்தோத்தல் என்பார் எழுதியிருந்த பல தத்துவங்களை இவர் ஆராய்ந்து உண்மை பலவற்றை நாட்டினார். நீராவியினுதவியினால் யந்திரங்களை இயக்கலாம் என்று ஜேம்ஸ் வார்ட் கண்டார். ஜோர்ஜ் ஸ்ரீபென்ஸன் என்பார் நீராவி வண்டியைச் செய்து ஓடவிட்டார். ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்கு மிக விரைவிற் செய்திகளனுப்பக்கூடிய தந்தியை மோஸ் காட்டித் தந்தார். இசைத் தட்டுகளையும், திரைச் சித்திரங்களையும் மின்சாரத்தின் பல பயன்களையும் தோமஸ் ஆல்வா எடிஸன் காட்டினார். ஓரிடத்திலிருந்துகொண்டே வெகு தூரமான இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் மக்கள்காண உதவி செய்தது இவரது நுண்ணிய விஞ்ஞான மூளை. வில்பர் ரைட் சகோதரர்கள், அந்தரத்தில் மனிதர் பறந்து செல்ல வழிகாட்டினர். பூமியின் கவர்ச்சிச் சக்தியை ஐசக் நியூட்டன் கண்டுபிடித்தார். இப்படி மேனாட்டு மக்களெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு இதில் முனைந்து எத்தனையோ நூதனங்களைக் கண்டுபிடித்தனர்.

விஞ்ஞானம் என்பது பேரறிவு. கடவுளின் படைப்பு நுட்பங்களையெல்லாம் பௌதிகம் (Physics), ரசாயனம் (Chemistry) முதலிய சாஸ்திரங்களாக

ஆராய்தல் பேரறிவென மேனாட்டினர் முயற்சி செய்துவர, மனிதன் தன்னைத்தானே அறிந்துய்யும் வழியைக் காட்டுகிற ஆத்மஞானமே உண்மையான பேரறிவு எனக் கீழைத்தேச மக்கள் உழைத்துவந்தனர். எனினும், 'நாங்களும் இந்த விஞ்ஞானம் அறிவோம்' எனத் தாவர உயிரைக்கண்ட ஜகதீச சந்திர போஸும், விஞ்ஞான நோபல் பரிசுபெற்ற தமிழர் சி. வி. ராமனும் போன்றோர் உலகுக்குக் காட்டினர். இன்று நமது பிரயாணம், உணவு, உடை, வீடு, வைத்தியம், இசை கைத்தொழில், போர்முறை முதலிய பலவற்றிலும் விஞ்ஞானக்கலை பரிபூரண ஆட்சி செலுத்துகின்ற அவ்வளவு உச்ச நிலையை அடைந்திருக்கிறது.

கால் நடையும், கட்டை வண்டியும், கழுதை, ஒட்டகமும் மாறி இன்று 'வைசிக்கிள்', 'கார்', 'பஸ்', 'புகைவண்டி' என்பன தூரத்தையும் நேரத்தையும் குறைத்துள்ளன. பாய்க் கப்பல்களுக்குப் பதில், புகைக் கப்பல்கள்மூலம் மனிதன் எவ்வித பயமுமின்றி ஆழ்ந்த கடற்பரப்பைக் கடக்கின்றான். பறவைகளைப் போல மனிதன் வானத்தில் பறக்கக்கூடிய நூதன வண்டிகள், மலை, கடல், வனம், வனாந்தரம் யாவற்றையும் ஒன்றாக்கி மணிக்கு நானூறு, ஐந்நூறு மைல் வேகமாகவும் பிரயாணம் செய்ய உதவிபுரிகின்றன. நீர்மேல் மட்டுமன்றி மீன்போல நீருள்ளும் மனிதர் சஞ்சரிக்க விஞ்ஞானம் வழி காட்டியிருக்கின்றது. தந்தி, கம்பியில்லாத் தந்தி, பேசும் தந்தி முதலியனவெல்லாம் உடனுக்குடன் செய்திகளையனுப்பப் பயன்படுகின்றன. மனோவேகத்தையும் மிஞ்சிய வேகத்தில் ஒலியலைகள் 'ரேடியோ' மூலம் பரப்பப்படுகின்றன. உயர்ந்த மாளிகைகளை மிக விரைவில் நிறுவ யந்திரங்களை விஞ்ஞானம் தந்தது. நமது உணவு நெடுநாளைக்

குப் பழுதடையாமல் இருக்க விஞ்ஞானம் உதவிசெய்கிறது. அடுப்பெரிக்கவும், வீடு பெருக்கவும், விளக்கேற்றவும், காற்றுவீசவும் விஞ்ஞானம் முன்னிற்கின்றது. நூதன முறையில் துணிகளுக்குச் சாயமூட்டவும், நூற்றல் நெசவு செய்தலாகிய வேலைகளைத் திறம்படச் செய்யவும், உடைகள் தைத்துக்கொடுக்கவும் விஞ்ஞானம் நமக்குச் சேவகனாயிருக்கக் காண்கிறோம். விஞ்ஞானக்கலை இப்படிக் கைத்தொழிலிலே பெரும் புரட்சியையும், மறுமலர்ச்சியையும் உண்டாக்கிவிட்டது. கோழியின்றி அடைகாக்கவும், பசு இன்றி வீட்டிலே பால் கிடைக்கவும் இன்று செய்கிறது விஞ்ஞானம்!

நம்முடலுக்குள் இருக்கும் நோய்களைப் படம்பிடித்துக்காட்டும் 'எக்ஸ்றே' போன்ற கருவிகளையும், சத்திர சிகிச்சைக்கான எத்தனையோ நூதன கருவிகளையும் பெற்று நோயாளிகள் பயனடைகின்றனர். 'பெனிஸிலின்' போன்ற அபூர்வ மருந்துகளையளித்து மக்களுக்கு ஆயுள் கொடுக்கிறது விஞ்ஞானம். யானை குதிரைகளில் ஏறி நடந்த யுத்தங்கட்குப்பதில் 'டாங்கி' போன்ற அசையும் கோட்டை யுத்தங்களைக் கேட்கிறோம். நெருப்புக் குண்டுகளும், அணுக்குண்டுகளும், நச்சுப் புகைகளும், யந்திரப் பீரங்கிகளும் போன்ற நவீன யுத்த தளவாடங்களை விஞ்ஞானம் போர் வெறியர்களுக்குக் கொடுத்து யமனுடைய சக்தியையும் வென்றிருக்கிறது. 'அணுவைத் துளைத்து' என ஒளவையார் கூறிவைத்ததைச் செயற்கையில் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது விஞ்ஞானக்கலைவளர்ச்சி காட்டிவிட்டது. அணுசக்தியை மனிதன் ஆளமுடியுமானால் நிமிஷமொன்றுக்குப் பதினேழாயிரம் மைல் வேகமாய் வானத்திற் பறந்து செல்லமுடியுமெனப் புது விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இப்

படி ஆக்கல் வேலைக்கும், அழித்தல் வேலைக்கும் விஞ்ஞானக்கலை மக்களுக்கு உதவிபுரிந்து வருகிறது. இந்த விஞ்ஞானத்தில் பெரும்பங்கைப் பெற்று நிற்கும் மின்சார சக்தியின் பெருமை நம்மால் நினைக்கவும் முடியாதிருக்கின்றது.

இவ்வாறு முன்னேறிவரும் விஞ்ஞானக்கலையைப் பலர் வெறுத்தும் நிற்கின்றனர். மனித வர்க்கத்தை அழிவுசெய்யும் கலை இது என அறியாது கூறுகின்றனர். 'இறந்தோரை எழுப்பிவைக்க விஞ்ஞானம் உதவி செய்யுமா' எனச் சோம்பற் கேள்விகள் கேட்கிறார்கள். உயிர்க்குலத்துக்குப் பேருதவி செய்யும் இக்கலையை, அழித்தற் தொழிலுக்குபயோகம் செய்பவர்கள் குற்றவாளிகளேயன்றி, விஞ்ஞானம் எப்படிக் குற்றவாளியாகலாம் என்று அவர்களைக் கேட்போம். மிருகப் பிறவியே பயம்கொண்டு வாழ்வதென, "விலங்கின் பிறப்பில் வெரூஉ" என்று முன்னோர் கூறினர். இன்று மனிதர்போற் பிறந்தோரே இப்பயத்தால் ஆட்கொள்ளப்பெற்று ஒருவரை ஒருவர் அழிக்கக் கருவி செய்வதில் முனைந்திருக்கின்றனர். அஹிம்சா மார்க்கத்தை மனிதன் கடைப்பிடிப்பனேல் விஞ்ஞானத்தினால் கெடுதல்புரிய நினைக்கவும் மாட்டானன்றோ! எனவே இக்கலையின் நற்பயன்களை ஓர்ந்து, இதன் வளர்ச்சிக்காக நாம் உழைத்து வரவேண்டும்.

இப்போ நம் நாடெல்லாம் இக்கலைக்காகப் பாடசாலைகளில் இடம் கொடுத்திருக்கின்றனர். விஞ்ஞான நூல்கள் பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்காகப் பரிசுகள் எங்கும் அளிக்கப்பெறுகின்றன. விஞ்ஞானிகளை எல்லா அரசாங்கங்களும் ஆதரித்து விஞ்

ஞான மகாநாடுகள் கூட்டுகின்றனர். இன்றைய நாகரீக மனித வாழ்க்கைக்குக் காற்றையும், நீரையும் போல விஞ்ஞானமும் இன்றியமையாததொன்றாகியிருப்பதால், இக்கலையின் பெருமைகளைப்போற்றி இதை வளர்ப்பது நம் கடமை.

5. உழவுத் தொழில்

நிலத்தை உழுதுசெய்யும் தொழில்கள் யாவும் உழவு தொழிலேயாயினும், இத்தொடர் சிறப்பாக நெற்செய்கையையே குறிப்பிடுவதாயிருக்கிறது. நமக்கு உணவு இல்லையேல் உயிர் தங்கும் இவ்வுடல் இல்லை. ஆதலால் உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோராவர். இதனை "உண்டி முதற்றே உணவின் பிண்டம், உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத்தோரே" என்று முன்னையோருணர்ந்து, இதற்குக் கருவியான கமத்தொழிலை விருத்திசெய்து வந்தனர். இன்று உலகில் உள்ள மற்றெத்தொழில்களுள்ளும் இத்தொழிலே சிறந்ததாக மதிக்கப்படுகின்றது.

உழவுத் தொழிலுக்கு மிக இன்றியமையாது வேண்டப்படுவன நீர்வளமும், நிலவளமுமாகும். இவையிருக்கும் நாட்டில் உணவுப் பொருட்கள் நிறைய உண்டாக்கப்படலாம். இக்கருத்துக் கொண்டே "சோழவள நாடு சோறுடைத்து" என நீர்வள, நிலவளங்கள் சான்ற சோழநாடு வர்ணிக்கப்பட்டது. நமது ஈழத்தின் இத்தகைய வளமும் "ஈழத்துணவு" எனக் குறிப்பிடப்பெற்றது. நம் நாட்டில் காலபோகமென்றும் முன்மாரி என்றும் இருபோகமாக நெற்செய்கை நடைபெறுகிறது. வயலை உழுது புழுதியாக்கி, மழை காலத்துக்குமுன் விதைத்துச்

செய்வது முன்மாரியென்றும்; களி நிலத்தை உழுது, மிதித்துச் சேறாக்கி நென்முளை விதைத்தோ, நெற்பயிர் நட்டோ செய்வது காலபோகமென்றும் கூறப்படுகின்றன. விதைப்பின் பின்னர் நீர்ப்பாய்ச்சல், களை கட்டல், காத்தல் என்பன முறையே நடைபெறுகின்றன. அப்பால் கதிரீன்று விளைந்த நெற்பயிர்கள் அறுவடையாகி, போர் குவித்து, வைக்கோல் வேறு, நெல்மணி வேறு, பதர் வேறாக்கப் பெறுகின்றன. பின்பு மறுபோக விதைப்புக்கு வேண்டுவனபோக மற்றைய நெல்லெல்லாம் மனித வர்க்கத்தின் உணவிலே முக்கிய பங்கைப்பெறச் செல்கின்றன.

எறும்பு முதல் யானையீறாக உள்ள சகல உயிர்களும் இத்தொழிலால் உணவுபெறுகின்றன. இத்தொழிலிடமான மருத நிலம் எக்காலத்தும் எழில் கொண்டு விளங்குவது. பசும் பயிர் நிறைந்து மரகதக் கம்பளம் போன்று விளங்கும் காலத்து வயலின் இனிய குளிர்மை கூறமுடியாதிருக்கும். நீர் மடைகளிலெழும் இன்னோசைகளும், களை பிடுங்கும் மகளிர் தொடுக்கும் பாடல்களும், விளைவு காலத்துப் புள்கடியும் ஓசையும், சூடு போடும்போது உழவர் கடாக்களை ஓட்டிப் பாடும் 'பொலி'ப் பாட்டுகளும் கேட்போருக்கு, வயலிடத்தை இசையரங்கம் என்று எண்ணச் செய்துவிடும். ஆங்காங்கு நீர் நிறைந்து, தெளிந்து காணப்படும் மடுக்களும், அவற்றுட் பரந்து கிடக்கும் ஒல்லி, தாமரை, கொட்டி முதலிய பூக்களும், நீர் நோக்கி இரைதேடும் பறவைகளும் தம்மழகால் தெவிட்டா இன்பந்தருவன. வேலை நடைபெறும்போது சுறுசுறுப்பாகவும், சுதந்தரமாகவும் உழைக்கும் உழவர்களின் உற்சாகம் எவரையும் பரவசப்படுத்துவது. உள்வீடு முற்றிப் பாரந்தாங்காது தலை தாழ்ந்த கதிர்

களது பொன்னிறம் வயலைத் தங்கமயமாக்கிப் பார்ப்போர் மனதைத் தன் வயப்படுத்தும். இப்படியான பலவகை இயற்கை எழில் நிறைந்த சூழலில் தாம் வாழ்க்கை நடத்துவதில் உழவர்கள் பெரு மகிழ்வடைகிறார்கள்.

உழவர்களுடைய வாழ்க்கை அசைவற்றது. எவர்க்கும் கட்டுப்படவேண்டாத சுதந்தர இன்பம் நிறைந்தது அவர்களுடைய தொழில். இதை நினைந்து இதன் பெருமைக்கு ஈடு வேறில்லை என்னும் பொருளமைய;

" ஏற்றம், உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு "

என்று ஔவையாரும்;

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் "

என்று வள்ளுவனாரும் கூறினர். உழவு தொழிலின் இணையற்ற பெருமை குறிப்பிடப்பெறாத தமிழ் நூல் இல்லையென்றே கூறலாம். திருவள்ளுவர் தமிழ் மறையுள் இதற்குத் தனியதிகாரம் ஒன்று கொடுத்து,

" சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை "

என இத்தொழிலின் தலைமைக்கும் காரணம் காட்டுகின்றார். 'உழவர் வைத்திருக்கும் உணவே உணவு, அதுதான் பிறர்க்கும் அறஞ் செய்தர்குரியது' என்பது நம் முன்னோர் கருத்து. இதனைப் "பகடு நடந்த கூழ் பல்லாரோடுண்க" என **நாலடியார்** வற்புறுத்துகிறது. இரப்போர்க்கு உணவளித்தல் தொடக்கம் மன்னர்க்கு அரசு நடத்த உதவியாதல்வரை இத்

தொழில் எல்லாவற்றிலும் பங்குபெற்று முதன்மையடைகின்றது. இப்பொருளை,

" இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் "

என இளங்கோவடிகளும் கூறினர். மன்னர் பெருமையெல்லாம் உழவு தொழிலிலே தங்கியிருக்கிறதென்பதைக் குறிக்கவே ஔவையார் "**வரப்புயர**"—என ஒரு அரசர்க்குக் குறித்துக் காட்டினர். எல்லாவற்றுக்கும் இத்தொழில் மூலகாரணமாவதையே கம்பரும்;

" அலகிலா மறைவிளங்கும், அந்தணராகுதி விளங்கும்,
பலகலையாம் தொகைவிளங்கும், பாவலர் தம் பாவிளங்கும்,
மலர்குலாம் திருவிளங்கும், மழைவிளங்கும், மனுவிளங்கும்,
உலகெலாம் ஒளிவிளங்கும் உழவர் உழும் உழவாலே "

என்று தொகுத்துரைத்தனர். இப்படியான பெருமைகளை அறிந்து இத்தொழிலை நம் முன்னோர் கண்போற் காத்து வந்தார்கள்.

இச் சிறப்புகளையெல்லாம் இன்று அனைவரும் ஒப்புக்கொள்ளுகிறோமாயினும், இத்தொழிலுக்குச் செய்கையில் முதன்மை கொடுத்துக் காக்க முற்படுகிறோமில்லை. உழவர்களும், மற்றையோர்போற் கருதப்படுவதில்லை. உழுதுண்டு வாழ்வோர் பெறும் ஊதியமும், தொழுதுண்டு வாழ்வோர் பெறும் ஊதியத்திலும் பல மடங்கு குறைவாக இருக்கின்றது. இக்காரணங்களால், கற்ற வாலிபர் எவரும் கமத்தொழிலைக் கருதுவதில்லை. உழவன் சிந்தும் வியர்வையினால் உணவுபெற்றுத் தாம் உண்டுகொண்டே 'உழவன் தாழ்ந்த தொழிலாளன், நாட்டான், குடிமகன்' என்றெல்லாம் அவனைக் குறைவாகக் கருதிப் புறக்கணிக்கின்றனர். உழவுதொழிலை வளர்ப்பதற்

காகக் கோடி கோடியாக ரூபாய் செலவழிக்க நம்மரசினர் பின்னிற்கவில்லையாயினும், கற்ற மக்கள் இத்தொழிலை மேன்மையாகக் கருதவோ, இதிலீடுபடவோ, எவ்வழியும் செய்யவில்லை. இத்தொழில் முதன்மைபெற்ற நாடுகளே மற்றைய நாடுகளுக்கு இன்று உணவனுப்பிச் செல்வத்தையும், செல்வாக்கையும் பெற்றுவரக் காண்கின்றோம். உழவு கைவிடப்பெற்ற காரணத்தால் அரிசிப் பங்கீடு ஏற்படவும், மக்கள் அரை வயிற்றுக்கும் போதாத உணவு பெறவும் நம் நாடு இலக்காயிற்று.

இக்குறைபாடுகளை உணர்ந்து இவற்றை நீக்கி உழவு சிறந்து, நாடு தழைக்க அரசினர் ஆவன செய்யவேண்டும். கற்றவர் யாவரும் இம்முயற்சியில் ஒத்துழைத்துக், கிருஷிகம் சிறந்து, செல்வம் செழித்து, மக்கள் பசிமாறி, உயிருற்றுவாழ இயன்ற வரை முயற்சிக்கவேண்டும். உழவுத் தொழிலின் சிறப்புக்களைச் சொல்லாலும் செயலாலும் மற்றோர்க்குக்காட்டி, இதை இகழ்வாரை நன்னிலை சேர்த்து, 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்ய'ப் பண்ணவேண்டும். இயந்திர சாதனங்களையும், புதுமுறைகளையும் கையாண்டு விளைவைக்கூட்டி நிறைந்த பயனைப்பெற வழிகாட்ட வேண்டும். தரிசு நிலப்பகுதியெல்லாம் உழவாற் தலைசிறந்து பொன்கொழிக்கும் பூமியாக எல்லோரையும் ஊக்கவேண்டும். உழவை மதிக்கும் தன்மைமட்டும் மக்கள் மனதில் ஊன்றச் செய்தால் அப்போ உழவுத்தொழில் தானே வளர்ந்து மக்கள் வளம்பெறவும் அதுவே காரணமாகுமன்றோ!

6. இலங்கையின் பொருளாதாரம்

நீலக்கடலிடை ஓர் நித்திலத் தீவாக விளங்கும் நம் இலங்கையானது வயல்வளம், மலைவளம், கடல்

வளம் முதலிய பல வளங்களும் நிறைந்து அழகும், சிறப்பும் பெற்றிருக்கின்றது. விளை பொருள், கல்வி என்பவற்றிலெல்லாம் முன்னேறிவரும் நம் நாட்டின் பொருளாதார நிலையை நாம் நன்கு கவனித்துப் பார்ப்பதும், வேண்டிய திருத்தங்கட்கு முயல்வதும் அவசியமாகும்.

ஒரு நாட்டின் செல்வத்தையே அதன் பொருளாதார நிலையென்கிறோம். விளை பொருட்கள், சுரங்கப் பொருட்கள், கைத்தொழில், வியாபாரம் என்பன தேசத்துக்குச் செல்வம் கொடுக்கும் வழிகளாகும். எனவே இவைகளின் பெருமை, அளவு, சிறப்பு என்பவற்றைக்கொண்டு ஒரு நாட்டின் பொருளாதார நிலையை நாம் ஓரளவு அறியக்கூடும்

பண்டையிலிருந்தே இலங்கை ஒரு கமத்தொழில் நாடாகவே இருந்துவந்திருக்கிறது. செழித்த நிலவளமும், நீர்ப்பாசனத்துக்கு அதிகமான நதிவளமும் இலங்கைக்கு இயற்கையின் கொடைகள். மத்திய மலைநாடுகளிலிருந்து கடலுக்கோடும் நதிகள் பல அணைகளால் முற்காலத்தே தடுக்கப்பட்டன. பள்ளத்தாக்குகளெல்லாம் குளங்களாக்கப்பட்டன. வெட்டுவாய்க்கால்கள் வயல்களுக்கு இவற்றிலிருந்து வேண்டியபோது நீரளித்தன, "உண்டிகொடுத் தோருயிர் கொடுத்தோர்" எனும் கோட்பாடுகொண்ட சிங்கள அரசரின் குன்றாமுயற்சியினால் அப்போ இலங்கை தன் அயல் நாடுகளுக்கும் உணவனுப்பி சங்க நூல்களில் "ஈழத் துணவு" எனப்பெயரும் பெற்றது. நிறைந்த வயல்களும், நல்ல நீர்ப்பாசனவசதியும் இருந்ததாலும், இங்கிருந்தோரின் சாப்பாட்டுக்குவேண்டிய அளவிலும் மேலாக விளைவிக்கப்பட்டு அந்நாட்களில் நெற்பயிரால் இலங்கைக்கு நிறைந்த வருமானமிருந்தது. இலங்கை

யின் பொருளாதாரத்துக்கு அது ஒருவழியாயுமிருந்தது. இன்று அக்காரணங்கள் முற்றும் மறுபக்கம் மாறினபடியால் அரிசிக்காக மற்றோரை எதிர்பார்க்கும் ஈன நிலையுடன், பெரும்பணத்தை வெளியில் அனுப்பிப் பொருள் குறையும் நிலையிலும் நாமிருக்கிறோம். தூர்ந்துபோன குளங்கள் திருத்தம் செய்யப்பட்டு, பாழான வயல்களும் திருத்தமுற்று, வயற்பரப்பையும் அதிகப்படுத்தி, இயந்திர சாதனங்களையும் கையாளத் தொடங்கினால் இலங்கை தனக்குவேண்டிய அளவுக்கு மட்டுமன்றி வெளியிலனுப்பி விலைப்படுத்தவும் போதிய நெல்லை அளிக்கும் நாடாகி தன் செல்வநிலையிலும் நன்கு கூடிவருமல்லவா!

இலங்கைத் தேயிலை உலகச் சந்தையிலே மிகப் பெயர்பெற்ற ஒன்றாயிருக்கிறது. இத்தகைய தேயிலையும், றப்பர், கொக்கோவா, தென்னைப்பிரயோசனங்கள், கறுவா, புல்லெண்ணெய், காரீயம், முத்து, இரத்தினக்கற்கள் என்பனவும் இலங்கையின் வருமானத்துக்குக் காரணமானவையாம். இவற்றிற் பெரும்பாலானவற்றை அளித்துப் பொருளாதாரத்தை உயர்த்தக் காரணமாகும் மத்திய மலைநாட்டை இலங்கையின் பொக்கிஷ சாலையென்றே சொல்லவேண்டும்.

ஆண்டுதோறும் ஏராளமான தேயிலை ஏற்றுமதியானபோதிலும், குறைந்த கூலியைத் தொழிலாளர்க்குக் கொடுத்து நிறைந்த ஆதாயத்தைப்பெறும் தோட்டச் சொந்தக்காரர்களாக வெளிநாட்டார் இன்னும் இருக்கிறதால் அப்பணத்தின் ஒருபகுதி எப்படியும் வெளிச் சென்று கொண்டேயிருக்கிறது! உள்நாட்டவர் பலர் புதுப்புதுத் தோட்டங்களை ஆக்கி இம்முயற்சியில் ஊக்கமாக உழைத்து வருகின்றமை இலங்கையின் பொருளாதாரத்தை நன்கு உயர்த்துமென்று நம்பக்கூடியதா

யிருக்கிறது. இப்படியே நம் செல்வத்துக்குக் காரணமான றப்பர், தென்னை என்பனவும் மற்றவையும் கூடிய கவனத்துடன் அரசினரால் விருத்திசெய்யப்பட வேண்டியவையாகும்.

இலங்கையிற் கைத்தொழில் விருத்தி இல்லையென்றே கூறலாம். இன்று உலகின் பொருளாதார நிலையை நாம் நோக்கினால் கைத்தொழில் நாடுகளே முன்னணியில் நிற்கின்றதையறிவோம். மனித வாழ்க்கையில் பெரும் பங்கு பெறுபவை கைத்தொழிற் பொருட்களேயாகும். ஆனால் நமது சீவியத்துக்கான பலகைத்தொழிற் பொருட்களுக்கு நாம் பிறநாடுகளை நோக்கிநின்று நம் பணத்தை வெளியிலனுப்புகின்றோம். இலங்கை முழுவதற்குமாக வெள்ளவத்தையில் உள்ள ஒரே ஒரு நெசவுயந்திரசாலை போதிய பலனை நமக்கு அளிக்கமுடியாது. பருத்தி விளையத்தக்க செழித்த பகுதிகள் தரிசு நிலமாகக்கிடக்கின்றன. அப்பகுதிகளில் பருத்திச்செய்கை நடைபெற்றால் வேண்டிய நூலுக்கும் நாம் மற்றோரைநோக்க வேண்டியிராது. உள்நாடுகளில் உள்ள கைத்தறிகள் பல, யுத்தகாலத்தில் மக்கட்குப் பெரு நன்மைபுரிந்தன. இவை நன்கு ஆதரிக்கப்படுதல் பொருள்நிலையை நாட்டுக்குக் கூட்டி மக்களின் வாழ்க்கைத்தரத்தை யுயர்த்துவதாகும்.

கண்ணாடித் தொழிற்சாலை, தோல்வேலை ஆலை, என்பன ஆரம்பிக்கப்பட்டு நற்பயனளித்து வருகின்றன. மரமரைக்கும் சாலைகளும், 'பஸ்'களுக்கு கூடாரம் செய்யும் சாலைகளும் இலங்கைக்குப் பணத்தைச் சேமித்து வருகிறதெனலாம், சீமேந்துத் தொழிற்சாலையும் திறக்கப்பெற்று, நன்கு நடத்தப்படின், அதுவும் நிறைந்த வருவாய் தரும். அரசினர் யோசித்தபடி சீனிசெய்யும் ஆலையும், கரும்புத்தோட்டங்களும் உண்

டாக்கப்படுவதும், றப்பர்த் தொழிற்சாலைகளை நிறுவுவதும் இன்னும் நாட்டுக்கு நயம் தருவனவாகும். இங்கே கிண்டி எடுக்கப்படும் இரத்தினங்கள், கடலிற் குளிக்கப்படும் முத்துக்கள், காரீயம் என்பனவெல்லாம் தொழிற் பொருட்களாக்கப்பட்டு வெளியிலனுப்பப் படின் நாம் கூடியலாபத்தை யடையலாம். இது போலவே யாழ்ப்பாணச் சுருட்டுக் கைத்தொழில் யந்திர சாதனங்களால் விருத்தியாக்கப்படின் மற்றும் நாடுகளுக்கும் சுருட்டுகளை அனுப்பி நிறைந்த பணத்தை இலங்கை பெறமுடியும்.

முன்னர் நாம் காட்டிய பொருட்களை வெளிநாடுகளில் விலைப்படுத்துவதில் இலங்கைக்குப் பொருள் கிடைக்கிறதெனினும், வியாபார உரிமை முழுதும் நம்மிடம் இல்லாமை ஒரு குறையாகும். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு விதிக்கப்படும் தீர்வை வீதம் குறைவு. ஆதலால் சுங்கப்பகுதி மூலம் பெறும் பணம் மற்ற நாடுகள் பெறுதல்போல் பெருந் தொகையாயில்லை. இந்தியாவிலிருந்து கிடைக்ககூடிய பொருட்களின் தீர்வை இன்னும் அதிகமாதலால் அவற்றை இறக்குமதி செய்து மலிவாகப்பெற்று லாபமடையவும் மக்களுக்கு வழியில்லை.

குறித்த வருமானங்கள் வரவேண்டிய அளவுக்கு இல்லாதபோதிலும் இலங்கையின் பொருளாதாரம் இலங்கையின் நிரந்தர செலவுகளை நடத்தப் போதியதாயிருந்து வந்தது. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, கிருஷிகம் எனும் அரசாங்கப் பகுதிகள் ஏராளமான பணத்தைச் செலவுசெய்து தம் கடமையைத் திருப்திப்படுத்தி வருகின்றன. இலங்கையின் பொருளாதார நிலையே இன்றைய இலவசக் கல்வியை மக்களுக்கு

அளித்திருக்கிறது. பாடசாலைகளில் இலவச மதியபோசனத்துக்காகச் செலவாகும் தொகையும் பெரியது. மலேரியாத் தடைபோன்ற வேலைகளிலும், நல்ல தெருக்களை அமைப்பதிலும், 'அதிக உணவு பயிரிடுக' போன்றவற்றிலும் நிறையப் பணம் செலவாகியும் இலங்கை கடன்படாதிருக்க இதன் பொருளாதாரம் இடம் தந்திருக்கின்றது. ஆனால் இப்போ புதிய பாராளுமன்றம் வந்ததினால் மேலதிகமான செலவு நாட்டுக்குப் பெரும்பாரமாக ஏறியிருக்கிறதென்று அரசயல்வாதிகள் கூறுகின்றார்கள். யுத்தத்திற்குப்பின்னால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருதலும், உள்ள உத்தியோகத்தர்களுக்குச் சம்பளம் அதிகமாக்கப் பெற்றிருத்தலும் நமது இன்றையப் பொருளாதார நிலைக்கேற்றதல்ல என அவர்கள் கூறுவது சரியே. தினசரி வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வழிகளைக் கையாண்டும்; கைத்தொழில், கமத்தொழில்களை உயர்ந்த நிலையில் ஆதரித்து வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கியும் நாட்டின் மானத்தை நமது அரசியற் தலைவர்கள் காக்கவேண்டும்.

நாட்டில் படித்தோர் வீதம் குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்துள்ளது. செல்வநிலையில் நடுத்தரமானோர் தொகையும் கொஞ்சம் அதிகரித்து வருகின்றதெனலாம். இயற்கை வளத்தை நன்முறையில் பயன்படுத்தும் வழிவகைகளை அரசினர் மேற்கொள்ள முற்பட்டிருப்பது பொருளாதாரம் உயருமென்பதற்கு அறிகுறி. நம் நாட்டின் நாணயமாற்று ஓரளவு நன்முறையிலிருக்கின்றது. இந்நாட்டின் பரப்பு சனத்தொகையும் கொண்ட மற்றை நாடுகளோடு நோக்கும்போது, இலங்கைத் தீவானது பொருளாதார நிலையில் மிகக் குறைவாயிருக்கிறது என்று சொல்வதற்கில்லை. அப்படிக் காணப்படின், பெரும்பாலும் அதன்காரணம்

அந்நியராட்சியென்றே கூறவேண்டும். அதிலிருந்து கூட இன்று நாம் நீங்கி, நம்நாடு சுதந்திர நாடாகி யிருப்பதால் காலவரையில் இலங்கை மிகச்சிறந்த செல்வமான ஒரு நாடாகுமென்பதற்கையமின்று.

7. (இலங்கையில்) சமீபத்தில் வந்த வெள்ளப் பெருக்கு.

உயிர்க்குலத்துக்கு வரக்கூடிய கஷ்டங்கள் பலவற்றுள்ளும் வெள்ளப்பெருக்கு மிகக் கொடுமையான தொன்று. பயங்கரமான யுத்தங்களுக்கும், தீப்பிடிப்புக்கும் நாம் ஓடித் தப்பிக்கொள்ளலாம்; ஆனால் எவ்வித முன்னறிவித்தலுமின்றி வருதலும், மனிதபெலத்தால் எதிர்க்க முடியாததுமான வெள்ளப்பெருக்கை விலக்குவது மிகக் கஷ்டமாகும்.

சென்ற ஆவணி மாதத்தில் (August 1947) இலங்கையின் தென்பாகமும் மத்தியபாகமும் கொடிய வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டன. எதிர்பாராத விதமாக மத்திய மலைநாடுகளிலும், தென்மேல் சரிவிலும் சோனாவாரியாக மழைபொழிந்தது. இதனால் அங்கிருந்து செல்லும் நதிகளெல்லாம் பிரவாகித்தன. தென்மேல் சரிவில் உள்ள களனிகங்கை முதலிய நான்கு நதிகளின் பெருக்கும் மகாவலிகங்கையின் பெருக்கும் மிகவும் குறிப்பிடத் தக்கதாயிருந்தன. இலங்கையின் தலைநகரமான கொழும்பும், மத்தியமலைக் கோட்டையான கண்டியும் மற்றைய பிரதேசங்களிலிருந்து துண்டிக்கப்பட்டன. எத்தனையோ கிராமங்களும், பட்டினங்களும் தரைமட்டமாயின. பிரமாண்டமான பாலங்களும், உயர்ந்த கட்டிடங்களு

மெல்லாம் இருந்த இடமே தெரியாமற் கொண்டு போகப்பட்டன. விதைத்த வயல்களும் விளைந்த வயல்களும் ஒன்றாயின. உயர்ந்த மரங்களும் தாழ்ந்த செடிகளும் ஒன்றுபட்டன. போக்குவரத்துகள் தடுக்கப்பெற்றன. வழிகளிலேயே புதைந்த 'பஸ்', 'கார்'கள் சில. வழி இடிந்து சரிந்துபோன வண்டிகள் பல. பள்ள நிலங்கள் மேடாயின. மேடு பள்ளமாயிற்று. மலைகள் சரிந்தன. மதில்கள் இடிந்தன. எங்கும் அல்லோலகல்லோலம்.

சலப்பிரளயமோ என அதிசயிக்கத்தக்கவகையில் எங்கும் நீர்ப்பிரவாகம். வெள்ளத்தில் அள்ளுண்ட கால்நடைகளெத்தனை! பால்மணம் மாறாப் பாலகரும், மடமகளிரும், மைந்தருமாய் வெள்ளத்துக் கிரையானோர் எத்தனை பேர்! வெள்ளம் மேவாத உயர்ந்த மேட்டிடங்கள் நிலச்சரிவினால் பலரை யமனுக் கிரையாக்கின. உயிர் கிடைத்தால் அதுவேபோதும் என்று ஓடி உயர்ந்த இடங்களை அண்டிய மக்கள் குளிரால் நடுங்கினர். உடுக்க உடையும், உண்ண உணவும், இருக்க இடமும் அவர்கட்கு இல்லை. எனவே வெள்ளத்துக்குத் தப்பினபோதும் மரணம் அவர்களை இவ்வகையில் தேடிவந்தது. அந்தோ! மரண தேவதையின் ஊர்த்துவ தாண்டவத்தின் கோரம் இப்படியிருந்தது. வெள்ளம் குறைந்தபோது எங்கும் பயங்கரமான நிசப்தம் நிலவியது. மரக்கிளைகளில் தொங்கிக் கொண்டிருந்த பிரேதங்கள் பல காணப்பட்டன. வீட்டுக் கதவுகள், கதிரை கட்டில்கள், 'பைசிக்கிள்' 'கார்' வண்டிகள்போன்ற சாதனங்கள் பல ஆற்றிலடைகரைப்பட்டுக் கிடந்தன. குடிசனம் நிறைந்து செல்வமாயிருந்த பகுதியெல்லாம் வெறிச்சென்று, ஒளியிழந்து, பரிதாபகரமான தோற்றத்தில் காட்சிதந்தன. ஆம்! வெள்ளம் ஈவிரக்க மற்றதேதான் ! இத்தகைய

பொருந் வெள்ளங்களாலன்றோ நமது பழந்தமிழ் நாடும், அருள் செல்வங்களும், தமிழர் கலைகளும் கொண்டு போகப்பட்டன என்று சங்க நூல்கள் கூறுகின்றன.

இத்தகைய கோர வெள்ளத்தினுல் நாட்டுக்கு நன்மையும் ஏற்படாமலில்லை. பெரிய பணக்காரரும், ஏழைக் குடியானவர்களும் ஒரே நிலைக்கு வந்தனர். மக்கள் நிறத்துவேஷமும், சாதித்துவேஷமும், கட்சித் துவேஷமும் மாறி இடர்ப்பட்டோர்க் குதவினர். கொடை என்பதையே அறியாத எத்தனையோ பெரிய வியாபாரிகள் வள்ளல்களாகினுர்கள். அண்மையில் நடக்கவிருந்த பாராளுமன்றத் தேர்தல் இடர்ப்பட்ட மக்களுக்கு இவ்வகையில் உதவியாயிற்று. தெரிவுக்கு முன்வந்த அபேட்சகர்கள், இடந்தொறும், இடந் தொறும் சென்று உணவும் உடையும் கொடுத்து மக்களுக்கு உதவிசெய்தார்கள். தேசாதிபதியும், மந்திரிமாரும் அழிந்த இடங்களை நேரிற்சென்று பார்த்து நிவாரணவேலைத் திட்டங்களைச் சிந்தித்தனர். வெள்ள நிதி எங்கும் திரட்டப்பட்டது; திரட்டப்படுகிறது. பண்டித ஜவஹர்லால் நேரு இந்திய அரசாங்கத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வெள்ள நிவாரண நிதியாக அனுப்பிவைத்தார். கஷ்டமுற்றோர்க்கு இக்கொடைகள் பேருதவி தந்தன.

இத்தகைய நிலையில் செல்வம் வாய்ந்த மத்திய இலங்கையை அதன் ஒளியிழந்து தவிக்கச் செய்தது வெள்ளப்பெருக்கு. இதைத்தடுக்க நிரந்தரமான அணைக்கட்டுகள் போடவேண்டும். நிலச்சரிவுப் பாதுகாப்புகள் அமைக்கப் பெறவேண்டும். எதிர்பாராத இத்தகைய இன்னல்களிலிருந்து மக்கள் தப்புவதற்கு முன்னேற்பாடுகள் செய்து வைக்கவேண்டும். இவ்விதம் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலன்றி வெள்ளப்பெருக்கிலிருந்து நமது வளம் கொழிக்கும் இலங்கையின் செழும் பகுதியானது காப்பாற்றப்பெற முடியாதல்லவா! அரசினருடைய நற்கவனத்துக்கு இதைச் சேர்த்து, இறைவனது நல்லருள் நாட்டைக்காப்பதாக!

8. தேசீய சேமிப்பு இயக்கத்தின் நோக்கமும் பயனும்.

சேமிப்பு அனைத்துயிர்க்கும் அவசியமானதொன்று தான். எறும்புகள் மாரிக் காலத்துக்கான உணவைக் கோடையிற் சேமிக்கின்றன. தேனீக்கள் பின் தேவைக்காகத் தேன் சேமிக்கின்றன. மரம் செடி கொடிகளும் தமக்கு வேண்டிய போதுதவுதற்காகக் கொஞ்ச உணவை வேரிலும், கிழங்கிலும், இலையிலும் எல்லாம் சேமித்து வைக்கின்றன—என்று படிக்கின்றோம். ஆம். மனிதனும் சேமித்தல் செய்கின்றான்.

ஆயினும் அவனது சேமிப்பு முறை சரியாகவில்லை. பொந்திலும் நிலத்திலும் முந்தையோர் புதைத்து வைத்தனர் பொருளை. திடீரென அவரிறக்கப் பின்னோர்க்கு அது பயன்படாதொழிந்தது. இவ்வாறு சேமித்த மாந்தர் தமக்கும் பிறர்க்கும் கேடு செய்தார் ஆதலால் ‘‘பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக் கேடு கெட்ட மானிடர்’’ என்று ஒளவையார் அவரைப் பேசுகின்றார். இத்தகைய கேடின்றி, மறைவாயிருக்கவும், வேண்டும்போது நமக்குதவவும், நமக்கு மரணமேற்படின் நம் பின்னோரைத் தானே அப்பொருள் தேடிப்போய்ச் சேரவும், லாபத்துடன் திரும்பக் கிடைக்கவும் கூடியதான ஒரு சேமிப்பை நமக்குக் காட்டுகின்ற இயக்கமே தேசீய சேமிப்பு இயக்கமாகும்.

இன்றியமையாத் தேவைகளுக்கு நாம் செலவழிக்க வேண்டிய தெவ்வளவு அவசியமோ, அது போலவே கொஞ்சமாவது நாம் சேமித்து வைக்க வேண்டியதும் அவசியமாகும். இச்சேமிப்பை நாம் கடமையாகக் கருதிப் பழக்கத்திற் கொண்டுவர நமக்கு வழி காட்டுவது இவ்வியக்கத்தின் பயன் கருதாத முக்கிய நோக்கமாகும். சேமிப்புப் பழக்கம் சிக்கனமாக வாழ நம்மைப் பயிற்றுகிறது. சிக்கனப் பயிற்சி நம்மைச் சிறந்த செல்வந்களுக வழி நடத்துகிறது. இப்பெரு நிலைக்கு வழிகாட்டும் இயக்கத்தின் சிறந்த நோக்கமும், பயனுமறிந்து நாம் நன்மைபெறத் தவறக்கூடாது.

“தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டு”மாதலால் இளமையில் சேமிப்புப் பழக்கத்தை வளர்க்கவேண்டும். கடலையும், கச்சானும் வாங்கி மிச்சமாகிற சதத்தையும் நாம் சேமித்துப் பயனடையத் தக்கவாறு சேமிப்பு இயக்கம் வேலை செய்கிறது. ஐந்து சத முத்திரைகள், இருபது சத முத்திரைகளாகச் சேகரித்தே தபாற் கந்தோர் வங்கிப் புத்தகத்தில் போடலாம். அல்லது தபாற் கந்தோர்களிலிருந்து சேமிப்புப் பத்திரங்களை வாங்கிக் கொள்ளலாம். சில்லறைச் சதங்களையும் நாம் சேமிக்க உதவுவதற்காக உண்டிப் பெட்டிகளும் தருகிறார்களாம். இப்படி நம் பணத்தை இலகுவாகப் பாதுகாத்து நமக்குத்தரும் தேசிய சேமிப்பு இயக்கம் அந்நாட்களிலிருந்திருந்தால் நம் முன்னோர் “ஈட்டிய ஒண் பொருளைக் காத்தலு மாங்கே கடுந்துன்பம்” என்று பாடியிரார் எனலாம். பணத்தை மீதப்படுத்த நம்மைப் பழக்குவதோடு நம் முதலுக்குக் கொஞ்சம் வட்டியும் சேர்த்து நயம் செய்யும் இத் தேசிய சேமிப்பு இயக்கத்தார்க்கு நாம் என்ன கைம்மாறு செய்யலாம்!

இளமை தொட்டே சிறிது சிறிதாகச் சேமித்து நன்மையடைந்தால், அதுவே அவர்களுக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறாகும். சிறு துளி பெரு வெள்ளமன்றோ! அற்ப சல்லியாக ஆயிரம் ரூபா சேர்த்து விடலாம். பணமில்லார் இவ்வுலகிற் பிணமாகவே கருதப் படுகிறார்கள். பணமென்றால் பிணமும் வாய் திறக்குமாம். ‘பணம் பந்தியில் குலம் குப்பையில்’—இப்படியெல்லாம் பணத்தின் பெருமை பற்றி அநுபவத்தில் அறிகின்றோம். அரசனுக்கும் சரி, ஆண்டிக்கும் சரி பணம் அவசியமே. இப்படியான பணம் நம்மிடம் இருக்கவேண்டாமா! நம்மிடம் வரும் பணத்தை இடாம்பீகமாகச் செலவழிக்கக் கற்றால் நாம் கடன்காரராகவே வாழ ஏற்படுமன்றோ! இராம பாணம் ஏறப்பெற்ற இராவணனது நிலையை,

“திடம்கொண்ட ராமபாணம் செருக்களத்துற்றபோது
கடன்பட்டார் நெஞ்சம்போலும் கலங்கினான் இலங்கைவேந்தன்”

என்று கடன்பட்டார்க்கு ஒப்பிடுகிறார் கம்பர். கடன் படுவதைப் பார்க்கிலும் கடல் நஞ்சு நல்லது என்கிறார் ஔவையார். ஐயோ! ,வேண்டாம்! நாம் கடன்காரர்களாக வேண்டாம். இளமை தொட்டே கையில் காசு சேர்க்கப் பழகுவோம்

பணம் சேர்க்கும் வழி வகைகளை வேண்டியபோது இலவசமாகச் செய்துதர அரசாங்கத்தார் காத்து நிற்கிறார்கள். தேசிய சேமிப்பு இயக்கம் நமக்குத் துணையாக நிற்கின்றது. கையைச் சுருட்டிக் காசைப் பொத்துவோம். முத்திரைகள் மூலம், பத்திரங்களை வாங்கி, வருமானவரியுமின்றி மிச்சப்படுத்துவோம். பணத்தைச் சேர்த்துப் பலத்தைப் பெருக்குவோம். சேமிப்பு இயக்கத்தைச் சேர்த்து வளர்ப்போம். நம்

முறையினர்க்கும் நண்பர்களுக்கும் தேசிய சேமிப்பு இயக்கத்தின் நோக்கமும் பயனும் எடுத்து விளக்கி அவர்களையும் இதிற் சேர்த்துச் சேமிக்கப் பழக்குவோம். இப்படியே நமது சமுதாயத்தையும், நம் நாட்டையும் செல்வம் கொழிக்கச் செய்வோம். வாழ்க தேசிய சேமிப்பு இயக்கம்!

4. பயிற்சி அப்பியாசங்கள்

மாணவர் தனித்தனி சிந்தித்து எழுதுவதற்காக பயிற்சிக்கான தலையங்கங்களை ஓரளவு வகைப்படுத்திக் கீழே கொடுக்கின்றேன் H. S. C., U. E. போன்ற வகுப்பு மாணவர்களுக்குப் பயனளிக்கக்கூடிய வகையில் கட்டுரைத் தலைப்புகள் இங்கு ஆங்கிலத்திலும் காட்டப்பெறுகின்றன.

1. கற்பனையும், வருணனைகளும் :

1. உமது வீட்டில் நடந்த ஒரு கொண்டாட்டம்.
   ANY HOUSE-HOLD CEREMONY
2. நீர் செய்த ஒரு மலைநாட்டுப் பிரயாணம்
   A JOURNEY TO A MOUNTAINOUS COUNTRY
3. நீர் செய்த ஒரு கடற் பிரயாணம்
   A SEA VOYAGE
4. மருத நிலம்
   THE SMILING FIELD
5. நீர் கண்ட ஒரு பிரசித்திபெற்ற கோயில் உற்சவம்
   A TEMPLE FESTIVAL
6. உமது பாடசாலை
   YOUR SCHOOL
7. பட்டினத் தெருக்காட்சி
   A STREET SCENE
8. கிராமப்புறச் சீவியம்
   RURAL LIFE

9. உமது இளமைக்கால நினைவுகள்
RECOLLECTION OF YOUR CHILDHOOD

10. கடற்கரையில் ஒருநாள்
A DAY BY THE SEA SIDE

11. நீர் செய்த ஒரு நிலாப்பிரயாணம்
A MOON LIGHT WALK

12. பழமரச் சோலை
AN ORCHARD

13. மாலைக் காட்சிகள்
A SUNSET SCENERY

14. பெரிய கல்வி ஸ்தாபனமொன்றில் ஒரு நாள் நீர் கண்டவை
A VISIT TO A FAMOUS EDUCATIONAL INSTITUTION

15. நான் ஒரு செல்வனானால்
IF I BECOME RICH

16. ஒரு பெரிய தீ விபத்து
A FIRE ACCIDENT

17. உமது சட்டை கூறிய சுய சரிதை
AUTOBIOGRAPHY OF A SHIRT

18. நான் கண்ட ஒரு கனவு
A DREAM

19. ஒரு பூம்பொய்கை
A LILY POND

20. சூரியோதய வர்ணனை அல்லது காலைக்காட்சிகள்
SUN RISE OR A SCENERY AT DAWN

21. மலை நாட்டு மக்கள் வாழ்க்கை முறை
THE LIFE OF MOUNTAIN DWELLERS

22. இலங்கையின் புராதன நகரம்
AN ANCIENT CITY OF CEYLON

23. உமது ஊரில் நடந்த ஒரு பாராளுமன்றத் தேர்தல்
A PARLIAMENTARY ELECTION IN YOUR VILLAGE

24. இலங்கையின் சுதந்திர தின விழா
INDEPENDENCE DAY CELEBRATION OF CEYLON

25. உமது பொழுதுபோக்கு வேலை
YOUR FAVOURITE HOBBY

26. உமது வீடு
YOUR HOUSE

2. சொல்லுதல்

27. ஐக்கிய சங்கக் கடைகள்
CO-OPERATIVE STORES

28. கிராமச் சங்கம் அல்லது நகரசபை
VILLAGE COMMITTEE OR URBAN COUNCIL

29. தற்காலப் பிரயாண வசதிகள்
MODES OF TRAVEL IN MODERN DAYS

30. அதிக உணவு பயிரிடுக
GROW MORE FOOD

31. ஓய்வு நேர உபயோகம்
MAKING THE BEST USE OF LEISURE

32. புலாலுண்ணல்
NON VEGETARIAN DIET

33. யுத்தத்தின் பயனாய் நம் வாழ்க்கையில் உண்டான மாற்றங்கள்
CHANGES BROUGHT ABOUT BY THE WAR IN OUR WAYS OF LIVING

34. நல்லொழுக்கம்
CHARACTER TRAINING

35. தேசிய சேமிப்பு இயக்கம்
NATIONAL SAVING MOVEMENT

36. சாரண வாலிபரியக்கம்
THE BOY SCOUTS

3. சுகாதாரம்

37. மலேரியாச்சுரம்
MALARIA

38. நீர் மிக விரும்புகிற ஒரு விளையாட்டு
YOUR FAVOURITE GAME

39. சுத்தம் சோறிடும்
CLEANLINESS IS ONES GREATEST WEALTH

40. தேகப்பயிற்சிக் கல்வி
PHYSICAL EDUCATION

41. உணவுப் பொருட் சத்துக்கள்
VITAMINS

42. அளவு கடந்தால் அமிர்தமும் நஞ்சு
TOO MUCH OF ANYTHING IS GOOD FOR NOTHING

4. தொழில்

43. நெற் செய்கை
PADDY CULTIVATION

44. குடிசைக் கைத்தொழில்கள்
COTTAGE INDUSTRIES

45. ஒரு மரக்கறித் தோட்டம்
A VEGETABLE GARDEN

46. நெசவுக் கைத்தொழில்
WEAVING INDUSTRY

47. கற்ற வாலிபரும் கமத் தொழிலும்
EDUCATED YOUTHS AND AGRICULTURE

48. இலங்கையும் கைத்தொழிலும்
CEYLON AND HER INDUSTRIES

49. மீன் பிடித்தற் தொழிலை நன்முறைக்குக் கொண்டு வருதல்
IMPROVING THE FISHING INDUSTRY

50. வேலை நிறுத்தம் செய்தல்
STRIKES

5. அரசியல்

51. தேசத் தொண்டு அல்லது சமூக சேவை
SOCIAL SERVICE

52. இலங்கையின் புதிய அரசியற் திட்டம்
CEYLON'S NEW CONSTITUTION

53. இலங்கையின் இலவசக் கல்வி முறை
FREE EDUCATION IN CEYLON

54. கிராமச் சீர்திருத்தம்
RURAL RE-CONSTRUCTION

55. ஐக்கியநாடுகள் சங்கம்
UNITED NATIONS ORGANISATION

56. இலங்கையின் உள்நாட்டு வியாபாரம்
CEYLON'S INTERNAL TRADE

57. இந்திய சுதந்திரப் போராட்டம்
INDIA'S FIGHT FOR INDEPENDENCE

58 இந்தியாவுக்கும் இலங்கைக்குமுள்ள தொடர்பு
INDO-CEYLON RELATIONS

59. இலங்கை சுதந்திரம் பெற்ற வரலாறு
HOW CEYLON WON HER INDEPENDENCE

60. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் நடந்த உலக அரசியல் மாற்றங்கள்
CHANGES BROUGHT ABOUT IN THE GOVERNMENT OF VARIOUS COUNTRIES AFTER THE SECOND WORLD WAR

61. இலங்கைத் தமிழர் சிங்களவர் பிரச்சினைகள்
COMMUNAL PROBLEMS OF THE TAMILS AND THE SINHALEASE IN CEYLON

62. அரசியல் கட்சிகள்
POLITICAL PARTIES

63. ஜனநாயக ஆட்சி முறை
DEMOCRACY

64 சமதர்ம ஆட்சி முறை
SOCIALISM

6. கல்வி

65. தாய்மொழி மூலம் கல்வி பயிற்றுதல்
MOTHER TONGUE AS THE MEDIUM OF INSTRUCTION

66. பத்திரிகை படிப்பதன் பயன்
ADVANTAGES OF NEWSPAPER READING

67. நீர் விரும்புகிற ஒரு தமிழ் நூல்
YOUR FAVOURITE WORK IN TAMIL LITERATURE

68. சமயக் கல்வி
RELIGIOUS EDUCATION

69. தமிழ்ச் சங்கங்கள்
TAMIL SANGAMS

70. பழந்தமிழர் நாகரீகம்
CIVILISATION OF THE ANCIENT TAMILS

71. பண்டைத் தமிழர் வாணிகம்
TRADE OF THE ANCIENT TAMILS

72. கல்வியின் சிறப்பு
GREATNESS OF EDUCATION

73. ஒரு நூல் நிலையம்
A LIBRARY

74. மாணவர் சங்கக் கூட்டமொன்றில் தலைவராக இருந்தபோது நீர் பேசியவை
YOUR ADDRESS AS THE PRESIDENT OF A STUDENTS' LITERARY ASSOCIATION

75. பெண்கள் முன்னேற்றம்
WOMEN'S SOCIAL PROGRESS

76. இசைக்கலை
MUSIC

77. சிற்பக்கலை
ARCHITECTURE

78. நீர் மிக விரும்பும் ஒரு தமிழ்ப்புலவர்
YOUR FAVOURITE TAMIL POET

79. இக்காலத் தமிழ்ப் பத்திரிகைகள்
MODERN TAMIL JOURNALS

80. நாகரீகம்
CIVILISATION

81. நாட்டுப் பாடல்கள்
FOLK SONGS

82. இலக்கியச்சுவை
LITERARY APPRECIATION

83. இன்றையத் தமிழ் மொழி
MODERN TAMIL

84. மொழியும் வரிவடித் தோற்றமும்
EVOLUTION OF WRITTEN LANGUAGE

85. குழந்தையின்பம்
THE DELIGHTS DERIVED FROM CHILD FRIENDSHIP

86. விருட்சங்கள்
TREES

87. தேனீ
THE HONEY BEE

7. விஞ்ஞானம்

88. விஞ்ஞானக் கல்வியும் அதன் பயன்களும்
ADVANTAGES OF SCIENCE

89. மின்சாரத்தின் உபயோகங்கள்
THE USES OF ELECTRICITY

90. சினிமாவின் நன்மை தீமைகள்
ADVANTAGES AND DISADVANTAGES OF THE CINEMA

91. வைத்தியத் துறையில் விஞ்ஞானத்தின் பங்கு
APPLICATION OF SCIENCE TO MEDICINE

92. அணு ஆராய்ச்சி
ATOMIC RESEARCH

93. விமானத்தின் விந்தைகள்
WONDERS OF AVIATION

94. தேசாந்தரம் செல்லும் பறவைகள்
MIGRATION OF BIRDS

95. பூச்சி புழுக்களின் ஆச்சரியகரமான வாழ்க்கை
WONDERS OF INSECT LIFE

8. ஒப்பு நோக்கல்

96. கலவன் பாடசாலைக் கல்வி முறையின் நன்மை தீமைகள்
ADVANTAGES AND DISADVANTAGES OF CO-EDUCATION

97. நாட்டுப்புற வாழ்க்கை சிறந்ததா, நகர்ப்புற வாழ்க்கை சிறந்ததா
COUNTRY LIFE AND TOWN LIFE

98. மேல்நாட்டு நாகரீகமும் கீழ்நாட்டு நாகரீகமும்
WESTERN AND EASTERN CIVILISATION

99. அஹிம்சையும் ஆயுதபலமும்
NON VIOLENCE VERSUS VIOLENCE

100. இலங்கையின் கிருஷிகம் - அன்றும் இன்றும்
AGRICULTURE IN ANCIENT AND MODERN CEYLON

101. பண்டைய யுத்த முறையும், இன்றைய யுத்த முறையும்
WARFARE-ANCIENT AND MODERN

102. கவிஞனும் ஓவியக் கலைஞனும்
THE POET AND THE PAINTER

103. கல்வியும் பண்பாடும்
CULTURE AND LEARNING

9. பழமொழிகள் போன்றவை

104. செய்வன திருந்தச் செய்
AIM AT EXCELLENCE

105. காலத்துக்கேற்ற கோலம்
LIVE IN TONE WITH THE TIMES

106. வழக்கத்தின் வலிமை
INFLUENCE OF TRADITION

107. பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே
GLORY TO ONE'S MOTHER AND FATHER-LAND

108. 'முயற்சி திருவினையாக்கும்'
INDUSTRY BEGETS WEALTH

109. 'சேரிடமறிந்து சேர்'
TEST THE FRIEND AND BEFRIEND HIM

110. 'அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்'
LOVE IS UNBOUNDED

111. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
MAKE HAY WHILE THE SUN SHINES

112. புயலுக்குப் பின் அமைதி
IF WINTER COMES CAN SPRING BE FAR BEHIND

113. நன்றி மறவேல்
FORGET NOT ACTS OF GRATITUDE

10. பெரியோர் வரலாறு

114. ஆறுமுக நாவலர்
ARUMUGA NAVALAR

115. சுப்பிரமணிய பாரதியார்
SUBRAMANYA BHARATI

116. திருவள்ளுவர்
TIRUVALLUVAR

117. கம்பர்
KAMBAR

118. ஔவையார்
AUVAYAR

119. கவி தாகூர்
RABINDRANATH TAGORE

120. மகாத்மா காந்தி ஒரு உலகம் போற்றும் பெரியார்
MAHATMA GANDHI :- THE WORLD RENOWNED PERSONALITY

121. டாக்டர் உ. வே. சாமிநாதையர்
DR. U. V. SWAMINATHAIYAR

122. கப்பலோட்டிய தமிழன் சிதம்பரப் பிள்ளை
V.U. SITHAMPARA PILLAI

123. கலை அறிஞர் ஆனந்த குமாரசாமி
DR. ANANDA COOMARASAMY

124. அன்னி பெஸண்ட் அம்மையார்
DR. ANNEBESANT

125. வீரமாமுனிவர் செய்த தமிழ்ப் பணி
BESCHE'S CONTRIBUTION TO THE TAMIL LITERATURE

கட்டுரைகளாக மட்டுமின்றி சம்பாஷணைகள், கடிதங்கள் என்பவை போலவும் இத்தலையங்கங்களை உட்பொருளாகக்கொண்டு எழுதிப் பயிற்சி செய்தல் நன்று. அப்பயிற்சிகளின்போது சம்பாஷணைகளுக்கும், கடிதங்களுக்கும் அமைந்த விதிகளைக் கவனித்துக்கொள்ளுதல் பயன்தரும். எதற்கும் தனிமுயற்சியும், பயிற்சியும் அவசியமாதலால் மேலும் மேலும் எழுதித் தேருமாறு மாணவர்களை இன்னோர் முறை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

சுபம்

திருத்தி வாசிக்க.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	5-6	திறமடைய	திறமையடைய
3	12	இபபுதயுகத்தில்	இப்புதயுகத்தில்
6	19	வழக்குகின்றன.	வழங்குகின்றன.
7	7	எடுத்கொண்ட	எடுத்துக்கொண்ட
11	26	கவனிததல்	கவனித்தல்
12	12	மயக்கக்கள்	மயக்கங்கள்
13	5	அழுததிக்காட்ட	அழுத்திக்காட்ட.
14	25	தருவதாதலால்	தருவனவாதலால்
15	11-12	இருக்கிறதல்லவ !	இருக்கிறதல்லவா !
15	30	முடிப	முடிபு
19	3	சேராது	சேரா
20	26	சொற்களையம்	சொற்களையும்
21	8-9	வடமொழி பெயர்ப்பிலும்	வடமொழி மொழி பெயர்ப்பிலும்
21	17	பொருளாராய்ச்சியம்	பொருளாராய்ச்சியும்
21	23	செய்கிறதுபோல்.	செய்கிறதுபோல்,
24	20	பிராணிகளுக்கு	பிரயாணிக'ளுக்கு
27	19	'குளு, குளு'	'குளு குளு
29	2	உலந்த	உலர்ந்த
29	3	செந்திறமான	செந்நிறமான
29	7	கிளைகள்;	(இதில் அரைமாத்திரையை நீக்கிக்கொள்க)
29	20	பூந்துறக்கும்	பூத்துறக்கும்
32	28	ஓடும்	ஓடும்
35	2 3	பொருத்தமாய்ப்த்	பொருத்தமாய்த்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
40	23	பாக்கப்படவில்லை	பார்க்கப்படவில்லை
41	19	(Current Subjects.)	(Current Subjects).
41	27	தோச்சி	தேர்ச்சி
42	2	மற்றயவற்றை	மற்றையவற்றை
42	20	பொருத்திருக்கின்றது.	பொறுத்திருக்கின்றது.
43	21	சிற்ப்பு	சிறப்பு
43	29	பின்வருவனப் போலக்	பின்வருவன போலக்
47	26	நமிர்ந்து நில்லடா	நிமிர்ந்து நில்லடா.
50	13	மெய்ம...ந்து	மெய்மறந்து
52	29	சூட்டுவோம்	சூட்டிடுவோம்
54	2	காத்துதிடவே	காத்திடவே
54	14	உணர்ச்சி புயல்	உணர்ச்சிப்புயல்
55	27	உயந்த	உயர்ந்த
58	2	ஆசிரியராவதோடு	ஆசிரியராயதோடு
62	17	தோம்ஸ்	தோமஸ்
63	16	'புகைவண்டி'	புகைவண்டி
74	15	அமெரிகக்ா	அமெரிக்கா
75	9	அரசயல்	அரசியல்
75		பரப்பு	பரப்பும்
83	6	பெருகின்றன.	பெறுகின்றன.
86	10	Saving Movent	Savings Movement
92	11	ஓவியக் கலைஞனும்	ஓவியக்கலைஞனும்